# அடையாள அட்டை பகிஷ்கரிக்கப்படலாம்!


சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, ஆவணி 25௳ (10-9-72) ஞாயிறு 1391 ஷஃபான் 1 புத்தகம் 25 இதழ் 41


# போராட்டம் படிப்படியாக விரிவடையும்!

## போராட்டக் குழு பல அணிகளாக இயங்கும்!

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை முன் வைத்து அக்டோபர் 2ம் நாள் ஆரம்பமாகவிருக்கும் சாத்வீகப் போராட்டத்தைப் படிப் படியாக விஸ்தரித்துச் செல்வதென தமிழர் கூட்டணியின் போராட்டக் குழு திட்டம் தீட்டியுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ்தேசிய இனம் சுதந்திரம் பெறுகின்றவரையில் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக நடை பெறுவதற்குவேண்டிய பல திட்டங்களை தமிழர் கூட்டணியின் போராட்டக் குழு தீட்டியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்தப் போராட்டத் திட்டங்களில் எளிமையானதும் கடுமையானதுமான பல் வேறு திட்டங்களும் இருப்பதாகவும், நேரம், காலம், சூழ்நிலைகளை அனுசரித்து இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

இதே வேளையில் பல்வேறு போராட்ட அணிகளை தமிழர் கூட்டணி உருவாக்குமென்றும், ஒரு அணி கைது செய்யப்பட்டால் அடுத்த அணி, அடுத்த அணி கைது செய்யப்பட்டால் அதற்கு அடுத்த அணி, என்ற வகையில் இவை உருவாக்கப்படுமென்றும் தெரியவருகிறது. இதற்கிடையில் இத்திங்கள் பதினோராம் நாள் முதல் கிராமம் கிராமமாக தமிழர் கூட்டணித் தலைவர்கள் சுற்றுப்பயணம் செய்து நேரடியாகத் தொண்டர்களைத் திரட்ட முடிவு செய்துள்ளனர்.

## தனிச் சிங்களத்தில் அவை வழங்கப்பட்டால்!

அடையாள அட்டைகளை தனிச் சிங்களத்தில் அரசு வழங்குமானால் அவற்றை ஏற்காமல் பகிஷ்கரிக்கும்படி தமிழ் பேசும் மக்களை தமிழர் கூட்டணி கோரலாம்.

அடையாள அட்டைகள் வழங்கப்படும்போது அவற்றை வைத்திருப்பவருக்கு புரிந்துகொள்ளும் மொழியிலேயே அவை வழங்கப்பட வேண்டுமென்றும், அந்த முறையில் தமிழ் மொழியில் அடையாள அட்டை மனுப் பத்திரங்களை நிரப்பிக் கொடுத்திருப்பவர்களுக்கு தமிழிலேயே அடையாள அட்டையை வழங்க வேண்டுமென்றும் ஆட்பதிவு இலாகா ஆணையாளருக்கும் பிரதமருக்கும் எழுதிய ஒரு கடிதத்தில் காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டையை தனிச் சிங்களத்தில் தமிழ் மக்களுக்கு அரசு வழங்குமானால், அது தமிழினம் இந்நாட்டில் அடிமை இனம் என்பதை அடையாளம் காட்டும் அட்டையாகவே இருக்குமென்றும், இதை மானமுள்ள தமிழர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஏற்கெனவே விளம்பரப் படுத்தப்பட்ட விளம்பரங்களின்படி அடையாள அட்டையின் முகப்பில் **தனிச் சிங்களமே** இடம் பெற்றிருப்பதாகவும், அடையாள அட்டைகளில் சிங்களமும் தமிழும் இடம்பெற வேண்டியதே நியாயம்என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

அடையாள அட்டைகள் தமிழில் வழங்கப்படாவிட்டால் அவற்றை ஏற்காது பகிஷ்கரிக்கும்படி தமிழர் கூட்டணி தமிழ் பேசும் மக்களைக் கோரலாம் என்றும் தெரிய வருகிறது.

## இந்துக்களுக்கு மொட்டை அடி சிங்களவர்களுக்கு முட்டை அடி!

பேராதனை பல்கலைக்கழக மாணவ விடுதியில் வெள்ளிக்கிழமை தோறும் இரவில் முட்டை கொடுக்கப்படுகின்றது. இதில் என்ன அதிசயம் இருக்கின்றது என்று உங்களுக்குத்தோன்றும்!

இதில் உள்ள வேடிக்கை என்ன வென்றால் விடுதியில் உள்ள தமிழ் மாணவ மாணவிகளுள் இந்துக்களே பலர். வெள்ளிக்கிழமைகளில் இந்துக்கள் மாமிசம் உண்பதில்லை என்பது உலகறிந்தொன்றாகும். இதை அடிப்படையாகக் கொண்டு வெள்ளிக் கிழமைகளில் முட்டை கொடுப்பதன் மூலம் முட்டை இலாபம் பெற்று வருகின்றார்கள் அறிவாளிகள் மிகுந்த பல்கலைக் கழகத்தினர். உரிமையைத்தான் பறிக்கிறார்கள் என்றால் உணவையுமா பறித்து ஏப்பம் விடுகின்றார்கள் எமது—சிங்கள—சோசலிசவாதிகள்? தமிழனின் அறிவுக்கும் மொட்டை அடி உணவுக்கும் மொட்டை அடி. இதையாருக்குச் சொல்லி அழுவது?—

கண்டி—ரவி.

தமிழ்ப் பகுதி

## உள்ளூராட்சி மன்றங்களின் மீது கட்டாய சிங்களத் திணிப்பு!

தமிழ்ப்பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மீது சிங்களத்தைப் பலவந்தமாக திணிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இவ்வளவு காலமும் தமிழ்ப் பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசுக்கு தமிழில் எழுதும் கடிதங்களுக்கு சிங்களத்தில் பதிலும் தமிழில் மொழி பெயர்ப்பும் அனுப்பும் கொள்கையை அரசு கடைபிடிக்கும் என்று கூறப்பட்டு வந்தது.

ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதற்கு சிங்கள மொழித் திணிப்புத் திட்டம் ஒன்றை நிபந்தனையாக்க இப்போது அரசு தீர்மானித்துள்ளதாம்.

வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் சிங்களத்தை திணிக்கவும் சிங்கள இளைஞர்களுக்கு தமிழ்ப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களில் வேலை பெற்று கொடுக்கவுமே இத்திட்டம் உருவாகியுள்ளதாகத் தெரிகிறது.

உள்ளூராட்சி சேவை அதிகார சபையின் செயலாளர் திரு. கே. இ. ஜே. இ. பெர்ணன்டோ இது சம்பந்தமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆணையாளர்கள் ஆகியோருக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையொன்றில்,

"வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசுக்கு அனுப்பும் கடிதங்கள் தமிழில் இருப்பின் அவற்றுக்கு சிங்கள மொழி பெயர்ப்பு இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு சிங்கள மொழி பெயர்ப்புடன் அனுப்பப்பட்டால், மட்டுமே மத்திய அரசு எழுதும் பதில் கடிதங்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்படும்.—"

(7ம் பக்கம் பார்க்க)

## பதவி துறப்பு செய்திகளுக்கு மறுப்பு!

தமிழர் கூட்டணிப் பா. உ.க்கள் ஐந்துபேர் செப்டம்பர் 30ம் திகதி பதவி துறக்க முடிவு செய்திருப்பதாக சில நாளேடுகளில் வந்த செய்திகள் முற்றிலும் ஆதாரமற்றதென்றும் பதவி துறப்பு பற்றி தமிழர் கூட்டணி இதுவரை சிந்திக்கவோ, முடிவு எடுக்கவோ இல்லையென்றும் தமிழர் கூட்டணி இணைச் செயலாளர் திரு. வி. தர்மலிங்கம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

## தமிழரசு மத்திய செயற்குழு !

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இம்மாதம் 9ம, 10ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமைப் பணிமனையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## "ஈழத்தமிழர்களின் துன்பம் கண்டு நாலரைக் கோடி தமிழர்களின் இரத்தம் சூடேறிக் கொண்டிருக்கிறது"

### இலங்கை அரசுக்கு ஓர் எச்சரிக்கை!

"ஈழத்துத் தமிழர்கள் தாய்மொழியின் உயர்வுக்காகவும், தங்களின் கலாசார பண்பாட்டு நாகரிக விடுதலைக்கும் ஒரு மாபெரும் போராட்டத்தை எதிர் நோக்கியிருக்கிறார்கள். உலகெங்கும் வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழர்கள் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஈழத்துத்தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிற துன்பமெல்லாம் தங்களுக்கு நேர்ந்த துன்பமாக எண்ணி அவர்கள் கண்கள் எல்லாம் கனலாகிக்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் 4½கோடி தமிழ் மக்களின் இரத்தம் சூடேறிக் கொண்டிருக்கிறது; சதை ஆடிக்கொண்டிருக்கிறது—"

—இவ்வாறு தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'மறு வாழ்வு' ஏடு தனது 1-8-72 ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

## உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் இன்று 93 வது நாள்!

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சி மண் கவ்வியது!

## தமிழர் கூட்டணிக்குப் பெரு வெற்றி!

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. எங்கும் பலத்த போட்டி நிலவியது. பாராளுமன்றப் பொதுத் தேர்தலைக்காட்டிலும் கூடிய அக்கறையும் ஆர்வமும் காணப்பட்டது. சில கிளைகளில் போட்டியின்றித் தேர்தல் முடிவுற்றது. தேர்தல் நடந்த பல கிளைகளிலும் பெரும்பான்மை ஸ்தானங்களை தமிழர் கூட்டணிப் பிரமுகர்கள் கைப்பற்றினர். இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபைத் தலைவராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுக் கடமையாற்றிவரும் மாஜி மேல் சபை உறுப்பினரும் சமசமாஜ கட்சி பிரமுகருமான திரு. பொ. நாகலிங்கம் போட்டியிட்ட உடுவில் கிளையில் அவர் மயிர் இழையில் வெற்றி பெற்றார். ஒன்பது பெயர் தெரிவில் வரிசைக் கிரமப்படி எட்டாவது ஸ்தானத்தைப் பெற்றார். இதே கிளையில் 91 வாக்குகள் மட்டும் அளிக்கப்பட்டன. முதலாவது ஸ்தானத்தைப் பெற்று வெற்றி பெற்ற தமிழரசுப்பிரமுகரும், மக்கள் குழு உறுப்பினருமான திரு. க. கந்தசாமி அவர்கள் 91 வாக்குகளைப் பெற்றதுடன் அவரது அணியில் ஐவர் வெற்றி பெற்றனர்.

ஆறுவது கிளையான சங்குவேலிக்கிளையில் தற்போதைய நிர்வாக பொறுப்புடைய இயக்குனர் சபையினரான தமிழர் கூட்டணியினருடன் சங்குவேலி சுதந்திரக்கட்சிக்கிளையினர் நேரடியாக மோதினர். கடும் போட்டி நிலவியது. பிரசாரம், தேர்தல் உத்திகள், வாக்களிப்பு முறை என்பன பாராளுமன்றத் தேர்தலையும் மிஞ்சிக் காணப்பட்டது. கடந்த காலத்தில் சங்கத் தலைவராக இருந்து வந்த திரு. சி. அரச இரத்தினமும் பழைய நிர்வாக சபையின் உறுப்பினர்களுமாக ஒன்பது பேர் ஓர் அணியிலும் திரு. இ. செல்லத்துரை சங்குவேலி சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை அமைப்பாளர் தலைமையில் ஒன்பது பேர் ஓர் அணியிலுமாக போட்டியிட்டனர்.

முடிவில் திரு. சி. அரச இரத்தினமும் அவர் அணியைச் சேர்ந்தவர்களுமாகப் போட்டியிட்ட ஒன்பது பேரும் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று எதிர் அணியைப் படுதோல்வி அடையச்செய்தனர். தமிழர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் 91 வாக்குதொடக்கம் 104 வாக்குகள் பெற்றிருக்க எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் 71 வாக்குக்களும் அதற்குக்குறைவாகவுமே பெற்றதால் மண் கவ்வினர்.

வெற்றிபெற்ற அணித் தலைவரும் — தமிழரசு ஆரம்ப காலந்தொட்டு நிர்வாக உறுப்பினராகவும், வாலிப முன்னணிச் செயலாளராகவும் கடமையாற்றி வந்து அரசாங்க ஊழியரானபின் கட்சி நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு கொள்ள முடியாத நிலையிலிருந்து வந்த திரு. சி. அரச இரத்தினம் அவர்கள் நன்றி தெரிவிக்கையில்: இது எனது சொந்த வெற்றி அல்ல. இது இக்கிராம மக்களின் பூரண வெற்றி தமிழர் கூட்டணிக்கு கிடைத்த மாபெரும் வெற்றி. அல்லாமலும் சங்குவேலி சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்த படுதோல்வியாகும். எவ்வளவோ பொய் பிரசாரங்களைச் செய்தும்

(9-ம் பக்கம் பார்க்க)

# கூட்டணிக் கொடி பேசுகிறது

நான் தான் தமிழர் கூட்டணிக் கொடி!

நான் வெறும் துணியாகப் பிறந்து, இன்று தமிழர் கூட்டணிக்கு சிகப்பு வர்ணம் தீட்டி நடுவில் உதய சூரியனின் சின்னம் பொறித்து தமிழர்களின் தன்னாட்சிக்கு 'தமிழரசு' அங்கீகரிக்கப்பட்ட கொடியாக உதயமாகி விட்டேன்.

ஆயினும் என் வாழ்வும் தாழ்வும் உங்கள் கையில் தான் இருக்கிறது. அதே சமயம் உங்களுடைய வாழ்வும் தாழ்வும் என்னுள் அடங்கியுள்ளது.

என்னை நீங்கள் மதித்தால் உங்களையே மதித்துக் கொண்டவர் ஆவீர்கள்.

நீங்கள் வாட நான் வாழ முடியாது!

நான் தாழ நீங்கள் தழைக்க முடியாது!

நான் பிறந்தது 'ஈழத் தமிழகம்' என்று நீங்கள் நினைத்து ஒற்றுமையாக இருக்கும் போதெல்லாம் எனக்கு மெய்சிலிர்க்கும்

தேசபக்தி உங்கள் இதயத்தில் ஊறும் போதெல்லாம் எனக்குப் புல்லரிக்கும்!

பெருமிதத்துடன் பட்டொளி வீசிப்பறப்பேன்.

''காற்றில் கொடி ஆடுகிறது'' என்று நினைத்துக் கொள்பவர்கள் அறியாதவர்கள்.

தாய்நாட்டை நீங்கள் மறந்து பிளவுபடும் போதெல்லாம் நான் சோர்வடைவேன்!

தாய்நாட்டிற்குத் தீங்கிழைத்து நீங்கள் தன்னலத்தைப் பேணும் போதெல்லாம் நான் துவளுவேன். தொய்வடைவேன். குற்றுயிராய்க்கிடப்பேன்.

'காற்று இல்லை கொடி அசையவில்லை' என்று எண்ணிக்கொள்வார்கள் உண்மை புரியாதவர்கள்.

உங்களைப்போல் எனக்கும் வெற்றிதோல்விகள் இன்பதுன்பங்கள் உண்டு.

ஆனால் அவற்றிற்கு நீங்கள்தான் காரணம் உங்கள் செய்கைகள் சொந்தங்கள் சிந்தனைகள் இவை தாம் காரணம்.

'ஈழத் தமிழகத்தில் வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் என்னுள் வசிக்கிறார்கள்.

எல்லோரும் என் மட்டற்ற அன்புக்குப்பாத்திரமானவர்கள் பழமையின் செறிவும் புதுமையின் மெருகும் என்னிடம் உண்டு. வரலாற்றின் சாரம் நான்! வருங்காலத்தின் நம்பிக்கையும் நானே!

எல்லாமதமும் எல்லாச் சாதியும் எல்லா இனமும் நான்! நாட்டுப்பற்று என் வேர்! ஒழுக்கமும் ஓய்வற்ற உழைப்பும் பகுத்

**தா. சிவலிங்கம்**

துண்ணும் பண்பும் என் கிளைகள்! பல திறப்பட்ட கலைகள் என் இலைகள்! செல்வமும் மன நிறைவும் என் கனிகள்.

சட்டம் நான், நீதி நான், நீதிமன்றம் நான். மேதைகளின் அறிவு நான். அகிம்சை நான்!

பாட்டாளியின் வியர்வையும் நான்.

நீங்கள் சாதித்த சாதனைகள் நான்.

உங்களுக்கு ஏற்பட்ட தோல்விகளும் நான்!

உங்களிடத்து மிக உயர்ந்தது எதுவோ அதுவும் நான்—உங்களிடத்தில் மிக இழிவானது எதுவோ அதுவும் நான்!

அடிமைத்தனத்தின் எதிரி நான்!

'தமிழரசு' தன்னாட்சி எனது உயிர்நாடி!

'தமிழரசு' தன்னாட்சி உதித்த தினத்தன்று என்னை நீங்கள் வணங்குவீர்கள்.

நான் உங்களை வாழ்த்துகிறேன்!

# இந்தியத் துவேஷம் இனியாவது போகுமா?

''இந்தியாவிலிருந்து இங்கு தமிழ் பத்திரிகைகள்வரக்கூடாது!''

''இந்தியாவிலிருந்து இங்கு தமிழ் இலக்கிய சஞ்சிகைகள் இறக்குமதி செய்யப்படக் கூடாது.''

''இந்திய தமிழ் இலக்கிய வாதிகள் ஏடு நடத்துவோர்—ஈழத்தைச் சுரண்டுகிறார்கள்.''

''இந்திய கலைஞர்களுக்கு இங்கென்ன வேலை?''

''இந்திய சினிமாப்படங்கள் இங்கு இறக்குமதியாகக் கூடாது''

—இவ்வாறான கூச்சலும் காழ்ப்புணர்ச்சியும் கடும் இந்திய துவேஷமும் பிடித்து விஷம் கக்கி வருபவர்கள் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று தம்மை கூறிக் கொள்ளும் கொம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் தாம் என்பதை ஈழத்து இலக்கியஉலகு நன்கு அறியும்.

ஈழத்து தமிழ் இலக்கிய கலாசார உலகில் இத்தகையதொரு துவேஷக் கூக்குரலின் மூலகர்த்தாக்கள் கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களே என்பது நாடறிந்த சங்கதி!

கூட்டணி அரசு பதவிக்கு வந்ததும இந்தக் கூச்சலை இவர்கள் உரக்கக் கத்தத் தொடங்கினார்கள்.

இலக்கியப் பிரச்சினைகள் பற்றி எதுவுமே தெரியாத குமாரசூரியரைப் பிடித்து வளைத்துத் தங்கள் காரியத்தைச் சாதிக்க முயன்றார்கள்—ஓரளவு சாதித்தும் விட்டார்கள்!

இந்தியாவிலிருந்து வந்து கொண்டிருந்த எத்தனையோ நல்ல பல தமிழ் ஏடுகளுக்கும் இலக்கிய சஞ்சிகைகளுக்கும் தடை விதிக்கப்பட்டது—சில ஏடுகளின் இறக்குமதி அளவு வெட்டிக் குறைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளால் ஈழத்தில் பத்திரிகை உலகம் முன்னேறிவிடும் என்று கத்தித் திரிந்தார்கள் கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள்!

ஆனால் தமிழகப் பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டதால் ஈழத்து இலக்கிய உலகு பாலைவனமாகப் போனதேதவிர இங்கு எந்தஒரு சஞ்சிகைதானும் தலை தூக்க முடியவில்லை!

**இலக்கிய உலகு**

இலக்கிய இரசிகர்களுக்கு வாசிப்பதற்கு எதுவும் கிடையாத நிலை தோன்றியுள்ளதே தவிர தரமிக்க எந்த ஒரு ஏடும் இங்கு தலை தூக்கி வளர்ந்ததில்லை—தமிழகத்து ஏடுகள் தடையால்!

கம்யூனிஸ்ட்டு எழுத்தாளர்களின் பொறாமைத் தீக்கு தமிழ் இலக்கிய இரசிகர்கள் பலியாக்கப்பட்டதே கண்ட மிச்சம்!

ஈழத்து இலக்கிய ஏடுகளுக்கு அரசாங்கம் விளம்பர உதவியும், மலிவு விலைக்கு நியூஸ் பிரிண்ட் போன்ற வசதிகளும் செய்து தரும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தார்கள். நியூஸ்பிரிண்ட் விலை ஏறியதுதான் கண்ட பலன்!

தமிழையும் தமிழினத்தையும் அழிக்க முயற்சி செய்யும் அரசுதானா தமிழ் இலக்கியத்தை வளர்க்க உதவும்?

இந்திய தமிழ் ஏடுகள் தடை செய்யப்பட்ட பின்னர், ஈழத்தில் தமிழ் இலக்கிய ஏடுகள் வளரும் என்று மூனு போனுக்கள் எதிர்பார்த்ததற்குமாறாக—இங்கு வந்து கொண்டிருந்த பலஏடுகளே தொடர்ந்து வெளிவர முடியாமல் செத்துவிட்டன.

இதயம்,
நெஞ்சம்,
பொன்மலர்,
ரோஜாப்பூ,
அஞ்சலி,

போன்ற பல இதழ்கள் சுவடே தெரியாமல் மறைந்து விட்டன.

சிரித்திரனும், வெள்ளியும் மட்டுமே நியாயமான அளவு 'சேர்க்குலேஷனுடன்' மக்களிடம் செல்வாக்குள்ளதால் நின்று பிடிக்கின்றன. இந்த இரண்டு ஏடுகளும் தமிழகஏடுகளுடன் போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய ஆற்றலுடையன. இவற்றை நடத்தும் 'சிவா'வும் வரதரும் இந்திய துவேஷமில்லாதவர்கள்; சொந்தப் பலத்தில் நம்பிக்கையுள்ளவர்கள்.

இந்த நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் வி. பொன்னம்பலம் இந்திய துவேஷம் பிடித்த தமது சகாக்களுக்கு புத்திமதி சொல்வதுபோல கரவெட்டியில் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்.

"தமிழக மக்களுக்கும், ஈழத் தமிழ் மக்களுக்குமிடையே கலாசார தொடர்பு இருப்பது அவசியம். இந்த உறவை மேலும் வளர்க்க வேண்டும்."

என்று வி. பி. யார் கூறியிருப்பது கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களின் கண்களைத் திறக்குமா? பொறாமையையும் துவேஷத்தையும் [illegible] தான் வேதாளம் தேடுகின்றது!

## சிறை வாழ் தமிழ் மீண்டிடவே!

தமிழா... தமிழா... தமிழா...
தமிழா... தமிழா... தமிழா...

எழுவாய் இனி வீறுடனே!
இடியேறெனவே எழுவாய்!
புழுவா? இலை, நீ புலியே என இப்
புவிகண்டிடவே எழுவாய்! (தமிழா... தமிழா...)

வடகீழ் தமிழ் மா நிலமும்,
மலைநாடது வாழ்வுறவும்—
தடைதூளது செய்திடுவோம்!
தமிழா, புயலாய் எழுவாய்! (தமிழா...தமிழா...)

சிறைவாழ் தமிழ் மீண்டிடவே,
திருநாடமைதென்றிடவே,
அறைவோம் முரசம்; பகை வென்றிடுவோம்
அடைவோம் தமிழ் நாடினியே!

—நயினை, சிவராச சிங்கம்

★

## நீங்கா நினைவு!

கொழும்பு மாநகரின் ஒரு பெரும் வீதியில்
ஒரு நண்ட ஊர்வலம்!
விழுப்புண் தாங்கிய விறல்வேந்தன் ஒருவனின்
வீரமரண யாத்திரை ...ஆமாம்
நாகநாதன் என்னும் நம்முயர் தலைவன்
போகும்போது ஓர் புதுமை செய்தான்
வானத்தை நோக்கி வண்ணமகன் கிடக்க
தானைத் தலைவர்கள் தம்பியர்கள் பின்தொடர
மோனத் தவமியற்றி முரட்டிரும்பன் போகையிலே
வானமும் அழுததம்மா! வையமும் அழுததம்மா!

— சரவணையூர் வே. இராசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் மணிக்கொடி பாரீர்!

அன்பு நண்பா,

உன் உள்ளத்திலே என் மீது சற்றுக் 'கோபம்' இருந்திடும்; 'ஊடல்' கொண்டிருப்பாய் என்பதை நானறிவேன். கிழமைதோறும் மடல் தீட்டி மகிழ்ச்சியையும், எழுச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டிவரும் நீ, இப்போது சில காலமாக வாராவாரம் ஒழுங்காக மடல் தீட்டுவதில்லை. உன் எழுச்சிக் கடிதம் காணு விட்டால் இருள் மேகம் கண்ட குயில்போல வாடிவிடுகிறது எம்முள்ளம்— விடுதலை உணர்ச்சிக்கு தூண்டுகோலாக விளங்குவது உன் கடிதம் அன்றோ; ஏன் நீ அதை ஒவ்வொரு கிழமையும் எழுதுவதில்லை; உன் எழுத்துக்கள் தாம் எமக்கு உணர்ச்சியூட்டும் 'டானிக்'; எது வந்தாலும் ஒவ்வொரு கிழமையும் மடல் தீட்டுவதை மட்டும் நிறுத்திவிடாதே; என்று எண்ணற்ற என் அன்புக்குரிய நண்பர்களும், தம்பிகளும் நேரடியாகவும், கடித மூலமும் வற்புறுத்தி வருகிறார்கள்.

'உள்ளே' இருந்திடும் எனது அருமை நண்பர் கவிஞர்கூட உடன் பிறந்தான் மூலம் அரசியல் மடலை தவறாமல் எழுதும்படி மெத்த ஆர்வத்துடன் சொல்லி அனுப்பியிருக்கிறார். இப்படிப் பல நண்பர்கள் எனக்கு 'தொல்லை' கொடுத்திடுகின்றனர்; ஆனால் இது துன்பத் தொல்லை அல்ல—இன்பத் தொல்லை— அன்புத் தொல்லை!

நண்பா, எனக்குமட்டும் என்னவாம்; உனக்கு மடல் தீட்டி, பிரச்சினைகளை உனக்கு எடுத்துச் சொல்லி, உன்னுடன் அளவளாவிடும் இன்பம் இருக்கிறதே — அது ஒன்று தானே எனக்கு ஆறுதல், மகிழ்ச்சி, நிம்மதி எல்லாம்!

பொறாமையும் பொச்சரிப்பும், எரிச்சலும் குமைச்சலும் கொண்டோர் என் இதயத்தில் வேல்கொண்டு பாய்ச்சி அதிலிருந்து இரத்தம் வடிந்திடும் போதெல்லாம்—அந்த வேதனையை மறக்கடிப்பது நீ காட்டும் எழுச்சியன்றோ! உடல் நலிவுற்றுப் படுக்கையில் கிடக்கும் போதும் என் எதிரே தெரிவது உற்சாகமும் உறுதியும் எதையும் தாங்கும் இதயமும் கொண்ட உன் கம்பீரமுகமன்றோ!

'நாட்டிலெங்கும் சுதந்திரவாஞ்சையை
நாட்டினாய் கனல் மூட்டினாய்!
வாட்டியுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் —வலி காட்டுவேன்!'

என்று ஆட்சியாளர் அச்சமூட்டியபோதும் உன் உறுதிபடைத்த கண்களன்றோ எனக்கு உற்சாகத்தைத் தருகிறது!

எனவே உனக்கு மடல் தீட்டுவதை விட எனக்கு மகிழ்ச்சியான வேலை வேறொன்றும் இல்லை. எப்போதாவது மடல் தீட்டாமல் விட்டேனானால் அதற்காக என் மீது நீ கோபித்துக் கொண்டாலும், அது 'செல்லக் கோபம்'— சொல்லாமல் கொள்ளாமல் மறைந்துவிடக் கூடியகோபம் என்பது எனக்குத் தெரியும்!

உனக்கு மடல் தீட்டி கருத்துக்களை பரிமாறிக்கொள்கின்ற உரிமைக்குமன்றோ நிரந்தரமாக வேட்டுவைத்திட முயல்கிறது அரசு— பத்திரிகைச் சபை மசோதா மூலம்!

சனநாயகத்தின் மூலவேராகத்திகழும் பத்திரிகை சுதந்திரத்துக்கும், கருத்துச் சுதந்திரத்துக்கும் வேட்டு வைத்திடுவதற்காகவே பத்திரிகைச் சபை மசோதா என்னும் பாஸிச மசோதாவை அரசு கொண்டுவர முயன்றது; ஆயினும் மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக அதை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ளது. ஒத்திவைத்துள்ளதே தவிர கைவிட்டுவிடவில்லை. மக்கள் எதிர்ப்புணர்ச்சி மங்கிடும்தருணம் பார்த்துமீண்டும் அந்தப் பாஸிச சட்டத்தை அரசு நிச்சயம் கொண்டுவர முயற்சிக்கும்!

நண்பா, பத்திரிகைச் சபை மசோதாவில் இடம் பெற்றிருந்து—இந்நாட்டுப் பத்திரிகையாளர்களின் பலத்த கண்டனத்திற்குள்ளான ஒரு சரத்து—ஒரு பத்திரிகையாளர் பத்திரிகையில் வெளிவரும் ஒரு செய்தியின் மூலத்தகவல் எங்கிருந்து கிடைத்தது என்பதை பத்திரிகைச் சபை கேட்கும்போது வெளியிடவேண்டும் என்பதாகும்.

ஒரு செய்தியின் மூலத் தகவல் எங்கிருந்து கிடைத்தது என்பதை ஒரு பத்திரிகைக்காரன் எக்காரணம் கொண்டும் வெளியிட மாட்டான்—ஜனநாயக நாடுகளில் இந்தக் கேள்வியை பத்திரிகையாளர்களிடம் யாரும் கேட்பதுமில்லை. ஆனால் இந்நாட்டில்தான் பத்திரிகைக்காரனின் இந்தச் சுதந்திரத்தை நசுக்க அரசு சதித்திட்டம் தீட்டுகிறது!

இந்த உரிமையை நிலைநாட்டிட—1970ம் ஆண்டில் ஒருதடவை கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவன் நான். அரசாங்கத்தில் நடைபெற்றதோர் ஊழல் சம்பந்தமான குறிப்பிட்ட அச்செய்தி எங்கிருந்து கிடைத்தது என்பதையிட்டு இரகசியப் பொலிசார் எவ்வளவோ துருவித்துருவி என்னிடம் கேள்விக்குமேல் கேள்வி போட்டும் — பத்திரிகைக்காரர்களின் அந்த உரிமையை கிஞ்சிற்றும் விட்டுக்கொடுக்க மறுத்து அதன் விளைவுகளை அப்போது ஏற்றுக்கொண்டேன் என்பது உனக்குத்தெரியும்!

**அந்தச் சமயத்தில்—இந்த உரிமைக்காக நான் தன்னந்தனியனாக போராடிய போது — இந்நாட்டிலுள்ள ஏனைய பத்திரிகைக்காரர்கள் யாரும் எனக்கு கை கொடுத்ததுமில்லை உதவ முன்வந்ததுமில்லை— அப்பொழுதே பத்திரிகைகள் யாவும், அந்த உரிமைக்காக வாதாடி—எதிர்த்துக் குரலெழுப்பியிருந்தால்— எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கண்டனம் தெரிவித்திருந்தால். அரசாங்கம் பத்திரிகைக்காரர்களின் உரிமையில் கை வைப்பதற்கு சற்று ஆலோசித்திருக்கும்—**

நானறிந்தவரை — பத்திரிகைச் சபை மசோதாவில் பத்திரிகைக்காரர்களின் உரிமையைப் பறிக்கும் அநீதியான விதி இடம்பெற்றதற்கு ஒரு முக்கிய காரணம் — 1970ம் ஆண்டு சுதந்திரனில் வெளிவந்த 'ஆளுங்கட்சி ஆரணங்கு'பற்றிய செய்தியும், அதையொட்டி நான் நடந்துகொண்ட உறுதியான போக்குமேயாகும்!

## அரசியல் மடல்

ஆக நண்பா, பத்திரிகை சுதந்திரத்துக்கு அரசு கடிவாளம் போட முடிவு செய்யுமானால் — அதனால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட போகிற இனம் தமிழினமே!

இன்று இந்நாட்டில் தமிழ் மக்கள், தமக்கு சிங்கள அரசு இழைக்கின்ற கொடுமைகளையும் கொடூரங்களையும், ஊரறிய உலகறிய எடுத்துச் சொல்லுகின்ற ஒரு வாய்ப்பாவது உண்டு. அந்த வாய்ப்பும் இல்லாமற் போய்விடும் — பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படுமானால்!!

அடிமைத் தனத்தை எதிர்த்து விடுதலைக்குப் போராடும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளும், ஆயுதப்படைகளும் ஏவிவிடப்படலாம் — அவற்றை எதிர்த்து தமிழ் மக்கள் எழுப்புகின்ற கூக்குரல் உலக நாடுகளின்

## அதைத் தாழ்ந்து பணிந்து வணங்குவம் வாரீர்!!

காதில் விழாமல் தடுத்திடவே பத்திரிகை சுதந்திரத்தைப் பறித்துவிட அரசு திட்டமிடுகிறது.

பத்திரிகை சுதந்திரத்தை பறிப்பதாலும்- படைகளை ஏவிவிடுவதாலும் ஒரு விடுதலை இயக்கத்தை அழித்துவிட முடியாது என்பதை ஆட்சியாளர் உணரவேண்டும் விடுதலை உணர்ச்சிகொண்ட மக்கள் —விடுதலையை எப்படியும் வென்றெடுத்தே தீருவது என்று உறுதி கொண்டெழுந்த மக்கள் — எந்தவித அடக்குமுறைகளையும் சந்திப்பதற்கு தயாராகவே இருப்பார்கள் என்பதை உலக நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் நினைவூட்டுகின்றன நமக்கு!

வங்கத்தில் பத்திரிகைகளுக்கெல்லாம் வாய்ப்பூட்டுப் போட்டு படையினரை ஏவிவிட்டு — விடுதலை கோரிய வங்க மக்களை கொன்று குவிக்க முற்பட்டான் வெறியன் யெஹ்யாகான். வங்க மக்களின் எழுச்சிக் குரலை வெளியுலகம் கேட்காமல் அடக்கிவிடலாம் என்று மனப்பால் குடித்தான் அவன் — ஆனால் முடிந்ததா அவனால்? வங்க மக்களின் அழுகுரலும் — சுதந்திரக் குரலும் வெளிநாடெங்கும் கலந்து கேட்கத்தான் செய்தன — விடுதலையும் பெற்றனர் அந்த மக்கள்!

அதுபோலவேதான் ஈழத்தமிழினமும், எந்தக் கொடுமை எதிர்ப்பட்டாலும்—எத்தனை தடைகள் வந்தாலும் — அவற்றையெல்லாம் சந்திக்கவும் — அடிமை விலங்கை உடைத்தெறியவும் விடுதலைப் போரில் குதித்திடவும் தயாராகி விட்டது!

ஆம் நண்பா, கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று நடத்தி பாரதத்துக்கு சுதந்திரம் பெற்றுத்தந்த அண்ணல் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2ம் நாள் ஈழத்தமிழினத்தின் சுயநிர்ணய சுதந்திரப் போராட்டம் ஆரம்பமாகப் போகின்றது.

அக்டோபர் 2ல் ஆரம்பமாகும் ஈழத்தமிழர் விடுதலைப்போர், எத்தனை ஆண்டுகள் சென்றாலும், சோராமல், துவளாமல், தமிழ் ஈழம் தனிவாழ்வு பெறும்வரை தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதே ஈழத் தமிழ்க் குலத்தின் — இளைய தலைமுறையின் ஒரே ஆவலாகும் — ஆசையாகும்!

அக்டோபர் 2ல் ஆரம்பமாகவிருக்கும் விடுதலைப் போராட்டத்தின் முறைகள், வழிகள் காலம் சூழ்நிலை ஆகியவற்றை அனுசரித்து மாறி மாறி அமையலாம் — ஆனால் ஏதோ ஒரு வகையில் போராட்டம் குலையாமல் நடந்தபடி இருந்திட வேண்டும். முதிய தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு காராக்கிருகத்துள் தள்ளப்பட்டுவிட்டால் இளைஞர்கள் போராட்டத்தைப் பொறுப்பேற்று நடத்திடத் தயாராக இருந்திட வேண்டும்.

**அக்டோபர் 2ல் ஈழத்தமிழர் நாடெங்கும் ஏற்றப்படும் தமிழர் கூட்டணியின் கொடி, ஈழத் தமிழினத்தின் தேசியக் கொடி— தமிழ்த்தாயின் மணிக்கொடி அது!**

தமிழர் கூட்டணியில் இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் கட்சிகள் அனைத்தும் இணைந்திருக்கின்றன — எனவேதான் தமிழர் கூட்டணியின் கொடியை தமிழினத்தின் தேசியக் கொடியென்று கூறுகிறேன்!

கொடியிலுள்ள சிகப்பு வர்ணம் சமதர்மப் பூக்காடாக எதிர்காலத் தமிழகம் விளங்க விருப்பதையும், விடுதலைக்கு நாம் செய்ய வேண்டிய தியாகத்தையும் எடுத்துக்காட்டிட — நடுவில் இருக்கும் பொன்நிற உதய சூரியன் தமிழினத்தின் ஒற்றுமையையும் உழைப்பையும் நன்றியுணர்வையும் நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்!

உதயசூரியன் நம் எழுச்சியின் சின்னம்— உதயசூரியன் நம் உறவின் சின்னம்! உதயசூரியன் நன்றியின் சின்னம்! தை முதல்நாளில் பொங்கல் பொங்கி தமிழர் விழா எடுப்பதுகூட உதயசூரியனுக்கன்றோ! சூரிய வழிபாடு தமிழர்களின் மிகத் தொன்மைவாய்ந்த வழிபாடும் ஆகும்!

எனவே நண்பா, தமிழர் கூட்டணியின் கொடி ஈழத்தமிழினத்தின் எழுச்சிமிகு கொடி! நம்பிக்கையின் சின்னம்! வணக்கத்துக்குரிய புனிதமான பொருள்! அக்கொடி பட்டொளி வீசிப் பறந்திடும்போது—தமிழர் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியில் துள்ளப்போகும் நிலைகாண உழைப்பதுவே நம் வேலை!

ஆக நண்பா, தமிழர் கூட்டணிக்கொடி— நம் தாயின் மணிக் கொடி! அக்டோபர் 2-ல் அதை ஏற்றிவைத்து—தாழ்ந்துபணிந்து வணங்கிடுவோம்! இந்தச்சுதந்திரக் கொடியைக் காத்திட ஈழத்தமிழகத்திலும் திருப்பூர் குமரன்கள் பலர் தோன்றிட நேரிடலாம்! எதற்கும் தயாராவோம்! தமிழர் கூட்டணிக் கொடி, நம் விடிவுக்கு வழிகாட்டிடும் நம்பிக்கையொளி! தமிழர் தேசிய கீதம் நமக்கு அயர்வு போக்கிடும் எழுச்சிநாதம்!

தமிழர் கூட்டணிக் கொடி எங்கும் ஏற்றிடுவோம்! தமிழர் தேசிய கீதத்தை நெஞ்சினிக்க, நாவினிக்கப் பாடிடுவோம்! அப்போது விடுதலை உணர்வு நம்மையறியாமலே நமக்கு பொங்கியெழும்! சுதந்திர வாழ்வுக்கு அது வழிவகுத்திடும்!!

உன் அன்புத்தோழன்

கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஆவதும் பெண்ணாலே! அழிவதும் பெண்ணாலே!

தமிழர் கூட்டணி, தமிழ்த் தேசிய இனத்தின் சார்பில் அரசுக்கு சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கை மீதான மூன்று மாத காலக்கெடு இத்திங்கள் 30ம் திகதியுடன் முடிவடைகிறது—

அரசுக்கு ஆறு அம்சக் கோரிக்கையை அனுப்பி விட்டு தமிழர் கூட்டணி ஏனோ தானோ என்று அசமந்த மாகவும் இருந்துவிடவில்லை.

சமாதானமாகக் கலந்துபேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் தமிழர் கூட்டணித் தலைவர்கள் தமக்குரிய ஆர்வத்தையும் ஆவலையும் அப்போதைக்கப் போது பகிரங்கமாக வெளியிடவும் பின்வாங்கியதில்லை-

பிரதமருக்கு மீண்டும் நினைவூட்டல் கடிதம் எழுதவும் தமிழர் கூட்டணி தயங்கியதில்லை — அழைத்தால் நேரில் வந்து ஆறு அம்சக் கோரிக்கை பற்றி விளக்கம் தரவும் தாம் தயார் என தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா பிரதமருக்கு தாம் எழுதியிருந்த கடிதத்தில் வெளிப்படையாகவே குறிப்பிட்டிருந்தார்—

அத்துடன் பிரதமரிடமிருந்து பதில் ஏதும் வராததையிட்டு தமிழர் கூட்டணி வருத்தம் வேறு தெரிவித்திருக்கிறது—

இதில் வெறும் வரட்டுக் கெளரவம் பேசிக்கொண்டு வாழா இருக்கவில்லை தமிழர் கூட்டணியினர்!

வீணே குழப்பங்களையும் கொந்தளிப்புக்களையும் நாட்டில் ஏற்படுத்துவதோ —போர்க்களத்தில் குதிப்பதுவோ தமிழர் கூட்டணித் தலைவர்களின் நோக்கமுமல்ல—விருப்பமுமல்ல—

போராட்டத்தைத் தவிர்த்து சமாதானமாக—கெளவரமாக தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியுமானால் அந்த வழியை தமிழர் கூட்டணி எப்பொழுதும் தள்ளிவிடாது என்பதை தமிழர் கூட்டணித் தலைவர்கள் அரசுக்கு சூசகமாக வெளிப்படுத்த எப்பொழுதும் தயக்கம் காட்டியதில்லை.

ஆனால்—

இந்நாட்டு தமிழ் தேசிய இனத்தினரில் தொண்ணூற்றென்பது வீதமான மக்களின் பூரண ஆதரவையும் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளதும்—

தமிழ் தேசிய இனத்தின் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியுள்ளதும்—

தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பிரதிநிதிகளில் 14 பிரதிநிதிகளை தன்னகத்தே கொண்டதுமான தமிழர் கூட்டணி எழுதிய கடிதத்துக்கு இரண்டரை மாதங்கள் கழிந்தும் பிரதமரிடமிருந்து எவ்விதமான பதிலும் இன்னும் வரவில்லையென்றால்—

இதை அகந்தை என்பதா? ஆணவம் என்பதா?

'உங்கள் கடிதம் கிடைத்தது' என்றாவது ஒருவரி பதில் எழுதிப்போடும் நாகரீகம் கூடப் பிரதமரிடம் அறவே அற்றுப் போய்விட்டதா?

பிரதமர் இந்நாட்டின் இரண்டாவதுபெரிய தேசிய இனமான தமிழ்த் தேசிய இனத்தை மதிக்கும் இலட்சணமே இவ்வளவுதானா?

தமிழ் மக்களிடமிருந்துமட்டும் நேசக்கரம் நீண்டு என்ன பயன்? பிரதமரிடமிருந்து அது நீளுவதாகக் காணப்படவில்லையே!

இந்நிலையில்—சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சாத்வீகப் போராட்டத்தில் குதிக்கும்படி தமிழ் தேசிய இனத்தைப் பிரதமரே தள்ளி விடுகிறார்,

வேறு வழியில்லை என்ற நிலையில் தமிழ்த் தேசிய இனம் போராட்டத்தில் குதிப்பதைத் தவிர என்னதான் செய்ய முடியும்?

இந்த நாட்டில் தமிழ் தேசிய இனம் சாத்விகப் போராட்டத்தில் ஈடுபட்டு அதனால் நாட்டில் சங்கடங்கள் ஏற்படுமானால்—நாடு இரண்டாகப் பிளவுபடுகின்ற சூழ்நிலை தோன்றுமானால், அதற்கு முழுக்க முழுக்க ஜவாப்தாரியாக இருக்கப் போகிறவர்கள் ஆட்சியாளரும் பிரதமருமே!

இதைவருங்கால வரலாறு நிச்சயம் எடுத்துக்கூறத்தான் போகிறது.

எம்மிடம் ஆட்சி பலம் இருக்கிறது—அதிகாரபலம் இருக்கிறது—படைபலம் இருக்கிறது—இவர்களாவது போராட்டம் நடத்துவதாவது—அப்படியே நடத்தினாலும் அதைக் கிள்ளியெறிந்து விடுவோம் என்று பிரதமர் கருதுவாரானால் அங்கேதான் அவர் தவறிழைக்கிறார் என்பதைக் கூற விரும்புகிறோம்.

அன்பையும் அஹிம்சையையும் மட்டுமே நம்பி நெஞ்சில் உறுதியுடன் நேர்மைத் திறனுடன் நிராயுதபாணிகளாகத் தங்கள் விடுதலைக்காகப் போராட்டத்திலிறங்கும் தமிழ் மக்களை துப்பாக்கியாலும் பீரங்கியாலும் ஒருபோதுமே துவளச் செய்துவிடமுடியாது!'

உலக வரலாற்றில் அடக்கு முறைகளால் எந்த இனத்தின் உரிமைப்போரும் நிரந்தரத் தோல்வியடைந்ததாக நாம் கேள்விப்படவே இல்லை! பிரதம அமைச்சருக்கும் இந்த உண்மை தெரியாமலிருக்க முடியாது.

'ஆவதும் பெண்ணாலே—அழிவதும் பெண்ணாலே' என்று கூறுவார்கள்.

பிரதமரும் மதிப்புக்குரிய பெண் குலத்தைச் சேர்ந்தவர் தாம்.

இலங்கை இனப் பிரச்சினையால் பிளவுபட்டு அழியப் போகிறதா அல்லது கெளரவமான முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு தமிழ்மக்களின் உரிமைகளை வழங்கி சமாதான நாடாகத் திகழப் போகிறதா என்பதை முடிவுசெய்யும் பொறுப்புப் பிரதமரது கரங்களிலேயே இன்னும் இருக்கிறது,

காலம் இன்னும் கடந்துவிடவில்லை!

# தமிழ் மாணவ சமுதாயமே!
## கடமை காத்திருக்கிறது உனக்கு!

'தமிழ்மதி' இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை

சனநாயக உலகில் பத்திரிகையின் பங்கு மகத்தானது. சமய வாழ்வில் ஆக்கமும் அழிவும் எப்படி இறைவன் வழிப்படி என கூறுகிறோமோ, அதே போல் சனநாயக நாட்டின் எழுச்சியும், வீழ்ச்சியும் பத்திரிகையின் கையிலும் தங்கியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. தேசிய தினசரிகள் மேற் கூறிய வகையில் அடங்கி உள்ளன. ஒரு அரசியற் கட்சியின் பத்திரிகையெனின், அது தன் கட்சியின் செய்திகளை முக்கியம் தாங்கிவரும். அவை மேற் கூறிய வழிக்கு உட்பட்டவை எனக் கூற முடியாது. ஆனால் தேசிய தினசரி என்ற போர்வையில் இங்கு இயங்கும் நாளேடுகளின் செயல்களை நினைக்கும்போது வெட்கமும் வேதனையும் அடையவேண்டியுள்ளது.

இங்கு இயங்கும் செய்தித்தாள்கள்; அதன் ஆசிரியரின் சொந்த விருப்பு, வெறுப்புகளை வெளிப்படுத்துவதிலும், தனிப்பட்ட ஓர் மனிதனையோ அல்லது ஒரு தாபனத்தையோ அழிப்பதில் கவனம் கொண்டு செய்திகளை திரித்தும், கற்பனையில் எழும் அபிப்பிராயங்களை பிரசுரித்தும், ஒருவரின் பேச்சை வெட்டிச் சிதைத்து, அப்பேச்சின் கருத்தையே வேறு அர்த்தம் தொனிக்கும் வகையில் எழுதியும் வருமாயின் அதைப் 'பத்திரிகா தர்மம்' என்று எப்படி அழைப்பது? அதை 'பத்திரிகா விபச்சாரம்' என அழைக்கலாம். இந்த விபச்சாரத்தில் ஈடுபடும் கயமைத்தனம் ஈழ நாட்டில் இருப்பது கண்டு வேதனைப்படுகிறேன்.

நான் அப்பட்டமாக கூறுகின்றேன், 'தினபதி' என்னும் தறுதலை ஏடு இந்த விபச்சாரத்தின் தலைமை அலுவலகமாக இயங்குகிறது. இதன் ஆசிரியர் தன் சொந்த வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றத்தால் இந்தக் கயிறு திரிக்கும் வேலையில் ஈடுபட்டார் என்பது ஈழம் வாழ் தமிழ் மக்கள் நன்கறிந்த தொன்றாகும்.

மேற் கூறிய விடயங்களை நான் இன்று எழுத நேர்ந்ததின் காரணம் அண்மையில் இவரது பரத்தைத்தனம் உச்சக்கட்டத்தை அடைந்து இருக்கிறது. இந்தப் பரத்தைத்தனம் இப்போது 'தினகரனுக்'குப் பற்றி விட்டது. இவற்றை மேலும் பரவ விட்டால் பெரும் ஆபத்து.

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் அரும் பாடுபட்டு அமைத்த 'தமிழர் கூட்டணியை' அழிக்க ஏரிக்கரைக் கும்பலின் பத்திரிகையான 'தினகரன்' 'டெயிலி நியூசு' எம். டி. குணசேனவின் தறுதலை ஏடு 'தினபதி'யும், மற்றும் 'டெய்லி மிரர்' போன்ற பத்திரிகைகளும் திட்டமிட்டு கூட்டாகச் சேர்ந்து இந்த மண்ணில் துவக்கியிருக்கும் ''கைபர்—வேலைகளை'' தமிழ் மக்கள் ஒருருவாய்—பேருருவாய் முனை மழுக்கியாக்கவேண்டுமென்பதே எனது விண்ணப்பம்.

16-7-72ல் ''சுதந்திரன்'' இதழ் ஆசிரியத் தலையங்கத்தில் எழுதியிருப்பது போல, தமிழர் ஒற்றுமையை உடைக்க, ஆட்சியாளர்கள் இந்நாளேடுகளை ஊது குழலாக பயன்படுத்துகிறார்கள் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ் [illegible] வேண்டியது தலையாய கடமையாகும். ஆகவே, தமிழ் கூறும் நல்லுலகமே! இப்பேர்ப்பட்ட பத்திரிகா தர்மம் மீறும் விபச்சாரிகள் பத்திரிகா உலகில் இருக்கலாமா? இன்றே பகிஷ்கரிப்போம் இந்த கயிறுதிரிக்கும் கும்பலை.

நம்மோடு வாழ்ந்து கொண்டு, நம்மால் வாழ்ந்துகொண்டு நம் மண்ணின் உப்பால் உடல் வளர்த்துக்கொண்டு, நமது உணர்வுகளை உறுத்திக் கொண்டும், நம் உயிருக்கும் மேலான தமிழ்மொழியை அழித்திட இங்கொரு கூட்டம் வாழ்ந்திடத் துணிகிறதென்றால், —குறிப்பாக தமிழ் இளைஞர் சமுதாயம்—தன்கையிருப்பைக் காட்டி பொய்விரிக்கும் அந்தக் கூட்டத்தை விரட்டவேண்டிய காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்.

இதன் முதல்படியாக, எமக்குள்ளே சிண்டு முடிந்துவிடும் வேலையில் ஈடுபட்டிருக்கும் தினபதி, தினகரனை மாணவமணிகளே! பகிஷ்கரியுங்கள்! பதர் களைந்து மணி கொள்வதில் தமிழருக்குப் பக்குவமுண்டு என்றாலும் உங்கள் பெற்றோர்களை, உற்றார் உறவினர்களை நண்பர்களை 'தினபதி' 'தினகரன்' பத்திரிகைகளை வாங்காமல் பகிஷ்கரிக்கச் செய்யுங்கள். இதனால் ஒரு சிலர் பாதிக்கப் படலாம். அதையிட்டு கவலை கொள்ளாதீர்.

'சுதந்திரன்' 18—6—72 இதழில் நண்பர் 'இளங்கோ' எழுதியது போல், எவை எமது விடுதலையை துரிதப் படுத்துமோ, அவையவை செய்யப்பட வேண்டும். மற்றவை தவிர்க்கப்பட வேண்டும். 'ஒத்துழையாமை' 'பகிஷ்கரிப்பு' 'எல்லாம் தமிழியக்கம்,' 'கடையடைப்பு' 'கறுத்தக்கொடி' —இவையெல்லாம் போர்க் கருவிகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் இளைஞர் சமுதாயமே! மே 22ல் உங்களது சக்தியை காட்டினீர்கள் மீண்டும் உங்களது சக்தியை காட்டினீர்களேயானால் மூன்று மாதத்தில் 'தினபதி'க்கு மூடு விழா செய்ய முடியும். குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லீம் பெருமக்களே, அங்குதான் கூடுதலாக 'தினபதி' விற்பனையாகிறது என்பது எனக்குத் தெரியும். நான் சொல்வதில் தவறு இருந்தால் நீங்கள் 'தினபதியை' பகிஷ்கரியாதீர்கள்.

20—8—72' சுதந்திரனில்' உங்கள் நண்பர் கே. எஸ். ஏ. கபூர் எழுதியிருப்பதை படித்தீர்களா? உங்கள் வரிப் பணத்தில் 'பௌத்த மதத்தை' வளர்க்கப்போகிறீர்களா? நீங்களும் 'புத்தம் சரணம் கச்சாமி' சொல்லிக் கொண்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் 'பதியுதீன் மாமூத் அரிசி தந்த அன்னை லெட்சுமிக்குப் பின்னால் போவதுபோல் நீங்களும் உங்கள் இனத்தை விட்டு போகப்போகிறீர்களா? சிந்தியுங்கள்! நன்றாக சிந்தியுங்கள்!! சிந்தித்து செயலாற்றுங்கள்!!! மே 22ல் உங்களது பரிபூரண ஒத்துழைப்பை எமக்கு அளித்தீர்கள்! அப்படியே இப் பகிஷ்கரிப்பு விடயத்திலும் அளிப்பீர்கள் என நான் நம்புகிறேன்.

இதே வேளையில் தமிழர் கூட்டணித் தலைவர்களும் இவ்விடயத்தில் சிறிது கவனம்செலுத்தி அவர்களது பிரச்சார மேடைகளில் இது பற்றி பேச வேண்டும் வர்த்தகப் பெருமக்கள் இவ்விரு பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுக்காமல் இருக்க வேண்டும். ஏஜெண்டு தோழர்கள் தங்கள் ஏஜெண்டுகளை நிறுத்திவிட வேண்டும்; இவ்வாறு தமிழர் வாழும் பிரதேசங்களில் எல்லோருமாக சேர்ந்து முற்றாக பகிஷ்கரிக்க வேண்டும்.

எமக்கென்று அரசியல் கலப்பற்ற ஓர் தேசிய தினசரியை உருவாக்க பணம் படைத்த பண் தமிழ் பெருமக்கள் முன் வரவேண்டும். இவ் ஈழத் திருநாட்டில் தனித் தமிழர்களால் (கலப்பற்ற) நடாத்தப்படும் தேசிய தினசரி இல்லாதது பெருங்குறை. தமிழ் தினசரி மட்டுமல்ல எமக்கென்று ஓர் ஆங்கில தேசிய தினசரியும் மிகமிக அவசியம்; ஏனெனில் நாங்கள் படும் இன்னல்களை வெளிநாட்டார் அறிவதும் அவசியம்; இக்குறையை எத்தனையோ பேர் எடுத்தியம்பியும் இதுவரை ஒருவித நடவடிக்கையும் ஒருவரும் எடுக்கவில்லை;

அண்மையில் ஓர் கருத்தரங்கில் இரசிகமணி திரு. கனக செந்திநாதன் பேசும்போது 'ஈழகேசரியின் காலம் பொற்காலம்' என்று குறிப்பிட்டார். அவ் 'ஈழகேசரி' என்ற பத்திரிகையையே மீண்டும் புதுப்பித்து தமிழ் ஈழத்தில் நடமாட விட முயற்சிக்கலாம். இவ்விரு குறையையும் உடனடியாக நிவர்த்தி செய்யும்படி பணம் படைத்த தமிழ் பெருங்குடியினரை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பு நண்பர்களே! இச்சகம் பேசியோ, இளித்துக் கிடந்தோ, ஏவல் பல புரிந்தோ, எடுபிடி ஆகியோ இருந்தால் மட்டுமே பிழைக்க முடியும் என்று எண்ணிக்கிடக்கிறார்களே சிலர், அவர்கள் ஒரு நாள் ஒரு பொழுதாகிலும் தம்மைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும், "இன்னொருவர் தயவெதற்கு? இந்நாட்டில் வாழ்வதற்கு?"

உண்மையிலே இந்த நாடு இன்னொருவர் தயவை நாடினால் மட்டுமே வாழ முடியும் என்ற விதத்திலே இருக்குமானால் நீங்களும் நானும், நமது பக்கம் திரண்டிருக்கும் நம் தலைவர்களும் ஏன் 'தனி நாடு' 'தனி அரசு' என்று பேசப்போகிறோம். நமக்கு என்ன ஆளவந்தார்களின் அருவருப்பைத் தேடிக் கொள்வதில் இலாபமா? சுவையா? இதே கருத்தை பேரறிஞர் அண்ணாவும் தனது 'காஞ்சி' இதழில் அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சாதியின் அடிமைநிலையை துடைத்திட வெகுண்டெழுந்தவன் பாரதி!

## அவன் வழி நடந்திடில் தமிழினத்துக்கு மீட்சியுண்டு!

தமிழ்நாடு தந்த விடுதலைக் கவிஞன் சுப்பிரமணிய பாரதியின் நினைவுநாள் இம்மாதம் 11-ம்திகதியாகும். அதையொட்டி இக்கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

—ஆ-ர்.

"தமிழில் மகாகவி பாரதியின் சாதனைகளைப், பாரதி யுகம்; பாரதி சகாப்தம் என்றெல்லாம் புகழ்வதை விடக் கவிதைத்துறையில் ஒரு கிருதயுகம் பிறந்துவிட்டது என்றே கொண்டாடலாம்" என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டனா. பார்த்தசாரதியின் வார்த்தைகளை (புதிய பார்வை — பக். 28) எண்ணிப் பார்க்கும்போது அது எத்தனை ஆதாரபூர்வமானது என்பது விளங்கிவிடுகிறது. புதியதொரு யுகம் பிறக்கவேண்டும் என்று பாரதி உண்மையிலேயே விரும்பியிருக்கிறான் என்பதற்கு, அவனது

"பொய்க்கும் கலியை
நான் கொன்று
பூலோகத்தார்
கண்முன்னே;
மெய்க்கும் கிருத
யுகத்தினையே
கொணர்வேன் தெய்வ
விதியிஃதே" என்னும்

பாடல் வரிகளே சான்று கூறும்.

அரசியல் பொருளாதார சமூக வாழ்வின் ஒவ்வோர் அங்கத்தினையும் பாரதி தொட்டுச் சென்றிருப்பதை நாம் காணமுடிகிறது. சமதர்ம சமுதாயத்தினை உருவாக்க அவன் செய்த முயற்சிகள் யாவும் கவிதை வடிவிலேயே எம்மை வந்துசேர்ந்துள்ளன. அதுவும் 'சாலை'யின் கூற்றுப்படி, "பழமையின் மலர்ச்சியாக, எளிமையின் வடிவமாக, இன்றையின் தேவை உணர்ந்து பிறந்த குழந்தையாகத் தமிழ் மக்களின் முன்னே தவழ்ந்தது அவருடைய கவிதை" (புதிய தமிழ்க் கவிதை—பக். 28) அந்தக் கவிதைகளிற் சிலவற்றை—கவிமணி அவர்கள்.

"பாப்பா பாட்டில்
நெஞ்சைப்
பறிகொடுத்தேனடா;
சாப்பாடேதுக்கடா; சீனி
சர்க்கரை ஏதுக்கடா?"

என்று தன் நெஞ்சைப்பறி கொடுத்த அற்புதக் கவிதைகளிற் சிலவற்றை— நினைவு கூர்ந்திடவே இக்கட்டுரை எழுகிறது.

### தேசிய கவியாக

"பாருக்குள்ளே
நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு..."
மன்னும் இமயமலை
யெங்கள் மலையே
மாநில மீதது போற்
பிறிதிலையே"

"முப்பது கோடியும்
வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி
முழுமையும் வீழ்வோம்"

இவையனைத்தும் பாரதியைத் தேசிய கவியென்று சுற்றி நிற்கும், அவரது பாடல் வரிகள். அடிமைப் பட்டுக்கிடந்த பாரதத்தை ஒரே பாரத நாடாகக் கண்டவர் பாரதி. அதனால் அவர் உள்ளத்திலேயும் ஒருங்கிணைந்த இந்தியாவின்

சர்வசித்தன்

விடுதலைக் குரலை கேட்கிறது. வாழ்வதாக இருந்தால் அனைவரும் ஒன்றாகவே வாழ்வோம் அல்லது செத்து மடிவோம் என்று கம்பீர கர்ச்சனை புரியும் பாரதியைப் பார்க்கிறோம்.

"நாங்கள் முப்பது கோடி
ஜனங்களும்
நாய்களோ? —பன்றிச்
சேய்களோ?"

என ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கெதிராக நெஞ்சு வெடிக்கக் கூக்குரலிடும் ஒப்பற்ற கவிக்குரலைக் கேட்கிறோம். இதனாலேயே அவர் தேசிய கவியாக உயர்கின்றார்.

ஆனால் இத்தனைக்குள்ளும் அவரது இதயம் இன்னும் எதையோ தேடி ஏங்கிக் கிடக்கிறது. அதுதான் 'ஜாதி' மதம் இல்லாத அனைவரும் உண்டு' உடுத்து சமமாக வீற்றிருக்கும் புதிய சமுதாயம். இந்தப் புதிய சமுதாயத்திற்காக அவர் ஏங்கிய ஏக்கங்கள் அவரது பாடல்கள் யாவிலும் ஜீவநாதமாக ஒலித்திடக்காண்கிறோம்.



"ஜாதிச் சண்டை
போச்சோ?—உங்கள்
சமயச் சண்டை
போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்—
கண்முன்
நிற்கொணுது போடா!"

என்று ஆங்கிலத் துரையொருவன் பாரதக் குடிமகனொருவனுக்கு கூறுவ அமைந்த பாடலில், மனிதரில் ஒரு பகுதியினரைச் சாதியின் பெயரால் ஒதுக்கி விட்டுச் சுதந்திரம் கேட்பது எத்துணை வெட்கக்கேடு என்பதைச் 'சூடாகப்' புரிய வைக்கிறார். மேலும்

"ஆயிரம் உண்டிங்கு
ஜாதி—எனில்
அந்நியர் வந்து புகல்
என்ன நீதி"

எனக் கேள்வியெழுப்பி; அந்நியர் இங்கு எம்மை ஆளுவதற்கு நம்மிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளன்றோ காரணம், எனச் சுட்டிக்காட்டி, அதனால்,

"ஜாதி மதங்களைப்
பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே—
அன்றி
வேறு குலத்தினரா
யினும் ஒன்றே"

எனச் சாதி வெறிக்கு முடிவு கட்டுமாறு பாரதத்தின மக்களை உரிமையோடு கேட்கிறார்.

...பழங்
கோத்திரங்கள்
சொல்லு மூடர்தம்
பொய்மைக் கூடையில்,
உண்மை கிடக்குமோ?"

(8-ம் பக்கம் பார்க்க)

# புரட்சிக் கவிஞரும் உணர்ச்சிக் கவிஞரும்!

பிறந்த பொன்னாட்டுக்கும் பெற்ற தாயின் இனிய மொழிக்கும் மற்றவர்களால் மாசு ஏற்படும் பொழுது அந்நாட்டு மக்கள் தீரம் மிக்க தியாகங்களைச் செய்து நாட்டையும் விழி போன்ற மொழியையும் விடுவித்த வீரவரலாறுகள் பசுமையாக ஏடுகளிலும் இன்றைய நம் வாழ்விலும் கண்டும் படித்தும் மெய்சிலிர்க்கின்றோம். இப்படியாக அந்நியர்களின் ..'ஆதிக்கத்தால் வீழ்ந்து விசையொடிந்து போன சமுதாயத்திற்குப் புத்துணர்வும் புதுப் பொலிவும் ஊட்டி புரட்சி மிக்க புதிய சகாப்தமொன்றை உருவாக்க ஊற்றுக் கண்ணாக விளங்குபவன் தான் உண்மைக் கவிஞன்.



அன்று பாரதம் அந்நியரின் ஏகாதிபத்தியத்தில் சிக்கிச் சிதறுண்டு கிடந்த பொழுது தமிழகத்தின் மூலையொன்றிலிருந்து விறிட்ட குரலொன்று விடுதலை விடுதலை என்று விண்ணதிர கேட்டது. பாரநாட்டுச் சத்திய யுத்தத்தில் தமிழ்நாட்டு மக்கள் முக்கிய பங்கு கொண்டவர்கள். அவர்களின் வீர உணர்வுக்கு வித்திட்டவன் பாரதியென்றால் மிகையாகாது.

கொப்பளிக்கும் உணர்ச்சிகளையெல்லாம் ஒருமித்து மக்களின் உள்ள ஓடையிலே கொந்தளிக்கும் சுதந்திர வெள்ளமாகப் புரட்சிக் கவிதைகளைப் பாடினன் பாரதி.

**என்று தணியும் இந்த**
**சுதந்திர தாகம்**
**என்று மடியும் எங்கள்**
**அடிமையின் மோகம்**

நீர் அற்ற நாக்கு வற்றி வறண்டு தாகத்தால் தவிப்பதுபோல் பாரதியின் அடிமை உள்ளம் சுதந்திரதாகத்தால் தவிப்பதை உணர்ச்சியுள்ள அவன் கவிதையடிகள் கண்ணாடிபோல் காட்டுகிறது.

அடிமைத்தளையில் அல்லல்படும் இனத்தின் ஈட்டிமுனை தான் கவிஞன் என்பதைப் பாரதியின் கவிதைகள் தெளிவாகக் காட்டுகின்றது. பாரதத்தின் சுதந்திரப் போரில் பங்கு கொண்டவர்களுக்குப் பாரதியின்பாடல்கள் வேகத்தையும் வீரத்தையும் ஊட்டியது.

கவிஞர்களின் உள்ளம் எப்பொழுதும் அநீதியையும், ஆதிக்க வெறியையும் கண்டு கொதிக்கும் உலைக்களமாகும். அந்த உலைக்களத்திலிருந்து வெளிக்கிளம்பும் கனல்கக்கும் கவிதைகள் அணுகுண்டையும்விட மிகவும் பயங்கரமானது.

பாரத பூமியில் புரட்சிக் கவிதோன்றிப் புதியசகாப்தமொன்றை உருவாக்கிச் சென்றானென்றால் இன்று ஈழத் தமிழகத்தில் இடையறாத இன்னலுக்கும் அடக்குமுறையின் அட்டகாசத்திற்கும் ஆதிக்க வெறியர்களின் அலட்சியத்திற்கும் இலக்காகி தவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் முக்கலையும் முனகலையும் வெள்ளிடை மலையாக வெளியுலகத்திற்கு வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறது—ஓர் மெலிந்த உருவம். அந்த உணர்ச்சியின் பிறப்பிடம்-உத்வேகத்தின் இருப்பிடம், பொழிகின்ற பூங்காற்றுக் கவிமழை பாரதியின் கவிதைகளையும் மிஞ்சி விடுகின்றன,

உணர்ச்சிக் கவி காசி ஆனந்தனின் கவிதைகளில் தென்றலும் இருக்கும், தேனுமிருக்கும் புரட்சிப் புயலுமிருக்கும்.

**சங்கு முழக்கியுரைப்பேன் —**
**நானே**
**சண்டைக் களத்திலே சாக**
**வந்தாலும்**
**மங்கிக் கிடக்கும் தமிழை —**
**மீண்டும்**
**மாளிகை ஏற்றி வணங்கியே**
**சாவேன்**

ஈழத் தமிழகத்தின் இலட்சியக் கவிமுத்து காசி ஆனந்தனின் இந்தப் பாடலை படிக்கும் பொழுது உள்ள ஓடையில் உறைந்திருக்கும்உணர்ச்சிக் குழம்புகளெல்லாம் நாடி நரம்புகளில் வெள்ளமாய் பாய்ந்து வீரத்தையும், [illegible] ஈழத் தமிழர்களின் இடர்களை அவர் சங்கு முழக்கி உரைக்கின்றார். இனிமை நலம் கொழிக்கும் இன்பத் தமிழ் அடிமைப்பட்டுச் சாகின்றது. ஈழத்தில் மங்கிக்கிடக்கும் இனிய தமிழை மாளிகையேற்றியே சாவேன் என்கிறார் உணர்ச்சிக்கவி காசி ஆனந்தன். அவருடைய சூழ் உரைகள் படிப்போரின் உள்ளத்தை ஊடுருவிச் செல்லக்கூடியது.

அன்று பாரதி அடிமைத் தளையைக் கண்டு குமுறும் எரிமலையாய் பாடல்களை பொழிந்தான்.

பாரதியின் நிலையில்தான் உணர்ச்சிக் கவிஞர் அவர்களும் ஈழத்தமிழகத்தில் தமிழ்த்தாய் படும் அவல நிலையைக் கண்டு

**நாட்கள் சிலபோனால் இவள்**
**நலிவாள் உடல் மெலிவாள்**

என்று உருக்கமாக எடுத்துரைக்கின்றார், குறிப்பாக இந்நாட்டு தமிழருக்கு.

கவிஞர்களின் உள்ளங்கள் எப்பொழுதும் ஒன்றுபட்ட ஒரே கருத்தை உலகுக்கு உணர்த்தும் என்பதற்கு மற்றொரு சான்று இரு கவிஞர்களும் தமிழ் மக்களிடம் செறிந்து கிடக்கும் சாதி வெறியை தகர்த்தெறிய துடிக்கின்றனர்.

கோடை கண்ட களிநிலம் பன்னூறு பாளங்களாக வெடித்து விரிவது போல் தமிழர்கள் மத்தியில் மண்டிக்கிடக்கும் சாதிவெறியைக் கண்ட பாரதி சின்னஞ்சிறு குழந்தையிடம்

**சாதிகள் இல்லையடி பாப்பா**

என்று நொந்து கூறுகின்றாரென்றால் அவர் சாதிவெறியை எவ்வளவு தூரம் வெறுக்கின்றார் என்பது இங்கு வெள்ளிடைமலை.

சாதிக் கொடுமையை ஒறுப்பதில் புரட்சிக் கவிக்கு உணர்ச்சிக்கவி சற்றும் சளைத்தவரல்ல. உணர்ச்சிக் கவிஞர் ஈழத்தமிழ் நாட்டில் அன்றும் இன்றும் நடக்கும் சாதி வேறுபாட்டை கண்கூடாகக் கண்டு நெஞ்சம் குமுறியவர் அவரின் உள்ளத்தில் இருந்து உதிர்த்த உதிரடிதான்

"ஆற்றுகின்ற தொழிலாலே
வருமோ சாதி
ஆர்சொன்னார் பாவிகளே"

உணர்ச்சிக் கவியின் உள்ளம் தமிழ் மக்களின் இழிவான இச்செயலைக் கண்டு பாவிகளே என்று கூறும் அளவுக்கு உள்ளானதென்று எண்ணும் பொழுது பாரதியைப் போல் கவிஞரும் உருகுகின்றார்.

இரண்டு கவிஞர்களின் கவி உள்ளங்களும் இங்கு ஒன்றாகவே ஒலிக்கின்றன. தாய்நாட்டின் மீதும் தமிழ் மொழியின் சிறப்பின் மேலும் தமிழர்களிடமுள்ள அறியாமையையும் அகற்ற பாரதி அன்று செயல்பட்டதுபோலவே கவிஞர் காசி ஆனந்தனும் இன்று செயல்பட்டுவந்தார். அவரை செயல்படாமல் தடுக்கும் நோக்குடன் [illegible] அரசு இன்று காராக்கிருகத்துள் பூட்டிவைத்துள்ளது.

கல்முனை நீ. கரிமாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை தமிழர் முதுமலை! அதனைக் காப்பது நமது முதல் வேலை!

இலங்கையில் ''பௌத்த வரலாறு என்ற நூலை'' எழுதிய வணக்கத்துக்குரிய 'வல்பொல இராகுல' என்பவர் தன்நூலில் பக்கம் 44இல் ''கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் சிங்களவரின் முன்னேர் என்று கருதப்படும் விசயன் வருவதற்கு முன்பேயே இங்கு சைவம் தழைத்தோங்கியிருந்ததென்று'' எழுதுகிறர். புத்தமதம் இந்து மதத்தில் இருந்து தோன்றியதேயன்றி இந்து மதம் புத்த மதத்தில் இருந்து தோன்றவில்லை. இந்த அடிப்படையில் பார்க்கையில் ஈழத்தின் ஆதிக்குடிகள் இந்துமதம் தழுவிய தமிழர்கள் என்பது வாய்வியல் நிலையில் ஏற்கத்தக்க வரலாற்று உண்மையாகும்.

## போல் பீரிஸ் பொழிந்த கருத்து

இவ்வரலாற்று ஆசிரியரின் கருத்திற்கு வழிமொழி கூறும் முறையில் சேர் போல் பீரிஸ் தனது நூலில் பின்வருமாறு கூறுகிறர்—

''விசயன் இலங்கைக்கு வர மிகப் பழைய காலத்திற்கு முன்பேயே (கி. மு. 543) இலங்கையில் பெயர் பெற்ற ஐந்து சிவத்தலங்கள் இருந்தன. இவை இந்தியா முழுவதையும் கவர்ந்து இழுத்த கோவில்களாக விளங்கின. இவை யாவன மகாரிற்றுவிற்கு அருகாமையில் உள்ள திருக்கேதீசுவரமும், சலவத்தாவிலும் முத்துக்குளிக்கும் பகுதிகளிலும் முக்கியத்துவம் பெற்றுவிளங்கிய முனீசுவரமும், மாந்தோட்டத்திற்கு அருகாமையிலுள்ள தொண்டீசுவரமும், கொட்டியாக் குடாவுக்கு எதிர்ப்புறத்திலுள்ள திருக்கோணேசுவரமும் காங்கேசன் துறைக்கு அருகிலுள்ள நகுலேசுவரமும் ஆகும். துறைமுகங்களுக்கு அருகே இக்கோவில்கள் கட்டப்பட்டிருப்பது தற்செயலாக இருக்க முடியாது. இக்கோவில்கள் பெரும்பாலும் இப்பகுதிகளில் வசித்த பண்படைத்த வணிகர்களின் தேவையை நிறைவு செய்வதற்காகவே இவை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.''

இங்கு குறிக்கப்பட்டிருக்கும் ''Mercantile Population'' (வணிக மக்கள்) என்பது தமிழரையே குறிக்கும் என்பது நினைவில் பதித்தற்குரியது.

மேற்குறித்த வல்பொல இராகுலாவும் சேர் போல் பீரிசும் தெரிவித்துள்ள கருத்துக்கள் வரலாற்று உண்மைகளாகயிருப்பதினுல் இவர்களைச் சிங்களவர்கள் அல்ல என்று இன்று காளான் முளைப்பதுபோல் முளைக்கும் சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் கூறமாட்டார்கள் என்று எதிர்பார்ப்போமாக.

## கத்தோலிக்க ஏடுகள் காட்டும் உண்மை

திருகோணமலை மிகத் தொன்மை வாய்ந்த காலத்திலேயே இந்து மதம் தழுவிய தமிழரின் வழிபாட்டுத் தலமாக விளங்கியதென்பதை திருகோணமலையை நேரில் பார்வையிட்ட தூய (பரிசுத்த) பிரான்சிஸ் சவேரியார் இவ்விடத்தை ''கீழைத்தேய மிலேச்சரின் உரோமாபுரி (The Rome of the Heathens of the East) என்று கூறியுள்ளார். விரிவை (History of the Catholic Church Vol I by Father Gnapiragasam என்ற நூலில் கண்டு கொள்க. இதில் எம்மை அவர் மிலேச்சர் என்று அழைத்திருப்பினும் திருகோணமலை கீழ்த்தேய இந்துக்களின் உரோமாபுரி என்று கூறிய பேருண்மைக்கு நன்றி நவில்வோமாக.

## ரெனண்ட் தெரிவித்த கருத்து

மற்றும் Tenant (ரெனண்ட்) என்ற பேரறிஞர் திருகோணமலை மரபு வழியாக தமிழர் தாயகம் என்பதை பின்வருமாறு சுவைபட மொழிந்துள்ளார் —

'திருகோணமலை மிகப் பழமை வாய்ந்த இடமெனினும் அரசியலிலும் பார்க்க சமயத் தொடர்புகளினுலேயே தன் பழம் பெருமையைப் பெற்றுள்ளது. படையெடுத்த மலபார் இனத்தவர்கள் தமது வழிபாட்டிற்குரிய பெயர் பெற்ற தலங்களுள் ஒன்ருக இதனைக் கருதுகின்றனர். இன்று சுவாமிமலை என்று கூறப்படும் உச்சப் பகுதியில் ஒரு பெரும் கோபுரம் இருந்தது. அத்துடன் இந்தியாவில் எல்லாப்பகுதிகளிலும் இருந்து வந்த யாத்திரீகர்கள் தங்குவதற்கு ஏற்ற ஒரு மடமும் இன்றைய பிரடிறிக் கோட்டையுள் இருந்தது. இக் கோட்டையுள் மிகப்புகழ்பெற்ற ஆயிரங்கால் மண்டபமும் இருந்தது. இதையொட்டி மிகச் சுவையான மரபுவழிக் கதைகளும் உண்டு.'

இக் கோவில் பற்றி Tamil Legends உண்டு என்று கூறினுரேயன்றி 'Sinhala Legends' பற்றி யாதும் கூறவில்லை என்பது ஈண்டு எம் நினைவில் பதித்தற்குரியது.

## பிரித்தானியக் களஞ்சியம் விளம்பிடும் கருத்து

அத்துடன் தமிழர் ஆதியில் குடியேறிய இடங்களுள் திருகோணமலையும் ஒன்று என்பதற்கு பிரித்தானியக் கலைக்களஞ்சியம் Encyclopaedia of Brittanica தொகுதி 22 பக்கம் 477 இல் திருகோணமலை பற்றிகூறப்படும் பின்வரும் கூற்று சான்ருய் அமைகிறது. The Town was one of the first Tamil Settlement in Ceylon இலங்கையில் தமிழர் முதலிற் குடியேறிய பட்டணங்களுள் திருகோணமலையும் ஒன்ருகும். ஏறக்குறைய இதே கருத்து அமெரிக்கக் கலைக்களஞ்சியம் தொகுதி 22 பக்கம் 65லும் காணப்படுகிறது.

## ஞானசம்பந்தர் நவிலும் கருத்து

திருகோணமலை சிவநெறி தழுவிய செந்தமிழ் மக்களின் தாயகம் என்பதற்கு 7ம் நூற்றுண்டில் வாழ்ந்த நாளும் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரின் கோணமலை பதிகத்தில் பின்வரும் சொற்தொடர் சான்ருய் அமைகிறது. ''குடிகளைப் பெருக்கி பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரே'' இச்சொற்ருெடர் 7ம் நூற்றுண்டிலேயே தமிழ்க் குடிமக்கள் மிக நெருக்கமாகப் பெருகி திருகோணமலையில் வாழ்ந்தார்கள் என்பதனை தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது.

**ஈழவேந்தன்**

## டாக்டர் சித்திரவேல் செப்பிய பேருண்மை

இன்றுள்ள கோணேசர் கோட்டை எல்லைப் பரப்புக்கான கோணேசர் கோவிலுக்கு உரியது என்ற அடிப்படையில் இப்பகுதியை புனிதநகராகப் பிரகடனம் செய்யும்படி இந்துக்கள் கோரிக்கை விட்டபடியிருக்கிருர்கள். ஆனுல் இப்பெருமைமிக்க கோவிலின் வரலாறு இன்றுள்ள கோணேசர்கோட்டையையும் தாண்டியயளவில் கோவிலின் நிலப்பரப்பு இருந்ததென்பதற்கு இக்கோவிலின் அறக்காவலராய் விளங்கிய காலம் சென்ற டாக்டர் சித்திரவேல் அவர்கள் 1968ல் ''ஈழநாடு'' செய்தி இதழுக்கு ஆய்வுள்ளத்தோடு வெளியிட்ட அறிக்கை சான்ருய் விளங்குகிறது. இதோ அப்பகுதி.

''கோணேசுவரர் ஆலயப் பகுதி இந்துக்களுக்கே உரியதென்பது சரித்திர நிரூபணமானதொரு விஷயம். இது போர்த்துக்கேயர் காலம் பற்றி டாக்டர் போல் பீரிஸ் எழுதிய புத்தகத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. டச்சுக்காரர்களும் தமது தாய்நாட்டுக்கு அனுப்பிவைத்த [illegible] கொண்ட மூன்று ஆலயங்கள் பற்றிய ''பாபநாச'' ஊற்றுப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்து ஆலயங்கள் 3,600 அடி நீளத்தையும் 320 அடி அகலப்பரப்பினையும் கொண்டு அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போதுள்ள கோணேசுவரர் ஆலய வாயிலிலிருந்து பிரடரிக் கோட்டை வாயில் வரையுள்ள தூரம் 3,100 அடிகள் மட்டுமே. எனவே பிரடரிக் கோட்டையிலிருந்து 500 அடிவரையான தூரத்திலுள்ள நிலமும் இந்த ஆலயத்திற்குச் சேர்ந்த ஆதனமே என்பது குறிப்பிடத்தக்கது. 1624ம் ஆண்டில் போர்த்துக்கேய காப்டன் கொன்ஸ்டன்டைன்டிசா இந்த ஆலயத்தை இடித்து இந்த ஆலயம் கட்ட உபயோகிக்கப்பட்ட கற்களை கோட்டை கட்ட பயன்படுத்தினுன்.

## குடிமக்கட் கணக்கு குறிக்கும் உண்மை 1898ல்

இதுமட்டுமல்ல இன்று திருகோணமலை சிங்கள மக்களின் படையெடுப்பினுல் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பினும் தொடக்க காலம்தொட்டு தமிழர் தான் திருகோணமலையில் குடியேறி வாழ்ந்தனர் என்பதற்கு மிகப் பழையகாலம் தொட்டு இன்றுவரை எடுக்கப்பட்ட குடிமக்கட் தொகை (census) அறிக்கை சான்ருய் அமையும். இதனை நிலைநாட்டி ''Times of Ceylon'' இல் 20-9-1968 இல் வெளிவந்த கட்டுரையின் முக்கிய பகுதிகள் அப்படியே இங்கு தமிழில் எடுத்தாளப்பட்டுள்ளது.

## குடிமக்கட்தொகை குறிக்கும் உண்மை 1898ல்

1898இல் திருகோணமலையில் உதவி அரசாங்க முகவராக இருந்த திரு. சி. எம். லுசிங்ரன் இலங்கைக்கு வரும் ஒருவர் ஒரு சிங்கள மனிதனைச் சந்திக்காது இலங்கையின் எந்தப்பகுதியிலாவது இருக்க முடியுமா என்பது நம்பமுடியாத ஒன்ருகும். ஆனுல் திருமலைக்கு வரும் ஒரு பார்வையாளருக்கு இந்நிலை ஏற்படலாம். இங்கு வாழும் சிங்கள மக்கள் சஸ்ரிங்கில் அல்லது ஸ்காவொரவில் வாழும் பிரெஞ்சு மக்கள் அல்லது சேர்மன் மக்களிடையிலும் பார்க்க எண்ணிக்கையின் குறைவுடையவர்களாகவே வாழ்கின்றனர். அத்தோடு மேலும் இலங்கையில் உள்ள எந்த ஒரு பட்டணத்திலாவது சிங்களமொழி பேசும் ஒரு பேரையாவது காணுமல் இருப்பது நம்பமுடியாத நிகழ்ச்சி எனினும் திருகோணமலையைப் பொறுத்தவரை இது உண்மையாகும்.

## 1901-ல்

1901ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிமக்கள் மதிப்பீட்டில் திருமலையின் மொத்த எண்ணிக்கையான 28,441 பேரில் 532பேர் கீழ்நாட்டுச் சிங்களவர்களாகவும் 671பேர் கண்டியச் சிங்களவராயும் இருந்தனர். அப்போது இலங்கை இந்தியத்தமிழர் ஒன்ருகவே கருதப்பட்டு அவர்களின் எண்ணிக்கை 17,069 ஆகவும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 8,258பேர்களாக அமைந்து இரண்டாவது பெரும் குழுவாகவும் விளங்கினர்.

## 1911-ல்

1911ஆம் ஆண்டு குடிமதிப்பீட்டின்போது, கீழ்நாட்டுச் சிங்களவர்களின் எண்ணிக்கை உண்மையில் 383 ஆக வீழ்ச்சியுற கண்டிய சிங்களவர் 755 ஆக சிறிதளவு உயர்ச்சியுற்றது. தமிழரின் எண்ணிக்கை 1சதவீதத்தினுல் உயர்வுற்றது.

## 1921-ல்

1921 இல் குடிமதிப்பீட்டின்போது திரு. எல். ஜே. ரி. ரேணர் குடிமக்கள் தொகை குடிமதிப்பீட்டிற்கு முந்திய இடைக்காலப்பகுதியில் 1890 ஆம் ஆண்டில் திருமலையில் புகையிலை உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வந்ததினுல் தமிழரின் எண்ணிக்கை மேலும் கூடியது. ஆனுல் 1891—1901 காலப் பகுதியில் முன்னைய பத்தாண்டு காலப்பகுதியுடன்

(8-ம் பக்கம் பார்க்க)

## மறவன் காசி

மூவேந்தர் வழிவழியாய் வந்த எங்கள்
மூத்தகவி! முழுப்புலவன்! எமதீழத்தின்
பாவேந்தன்! தமிழமுதை அள்ளி அள்ளிப்
படைத்தெமது பசிதீர்க்கும் பண்புவாய்த்தோன்!
நாவேந்தன்! தமிழ்வீரன்! நாடுகாக்கும்
நற்ருெண்டன் — மெய்த்தொண்டன்!
தமிழாள்வோரில்
மாவேந்தன்! எதுவரினும் தனது கொள்கை
மாருப்பேர் ஆனந்தன்! மறவன் காசி!

சிறுநரிகள் கண்டஞ்சும் சிங்கம்! மாற்ருர்
சிந்தையெலாம் சிதறடிக்கும் சொல்லாளன்!
விறுவிறுப்புக்கவிதந்து எமதுள்ளங்கள்
வெறிகொள்ள வைத்திட்ட வெற்றிச்செம்மல்!
மறுபேச்சிக்கிடமின்றி மாற்ருர் தம்மை
மயக்கி ஒரு பேச்சோடு மடக்கவல்லோன்!
உறுநோயால் தமிழணங்கின் உளம் நோகுங்கால்
உளம் நோகும் ஆனந்தன்! உணர்ச்சிக்காசி!

வெஞ்சிறையில் வாடுகிருன் வீரன் காசி!
வெறிகொள்ளவைக்கின்ருன் எம்மையெல்லாம்!
அஞ்சாத வீரர்களாய் ஆக்குகின்ருன்!
அறியாமை இருளெல்லாம் போக்குகின்ருன்!
கெஞ்சி உயிர்ப்பிச்சையினைக் கேட்டு வாழும்
கீழோர்க்கும் சிந்தனையைக் கிளறுகின்ருன்!
பஞ்சாக்கிக்கொடுமையெலாம் பறக்கவைக்கப்
பார்க்கின்ருர் காசியினுல் இளைஞர் காலம்!

சிறைவைப்பால் தீராது சிக்கல்! போட்டுச்
செந்தழலில் தீய்த்தாலும் தமிழிலார்வம்
குறையாது! மாருக நல்லோர் நெஞ்சம்
கொதிக்கும்! அதுகுமுறும்! அதுகொந்தளிக்கும்!
மறையாது தமிழுரிமை உணர்ச்சி! என்றும்
மங்காது! மாருக மனதில் பொங்கி
நிறைவாகும்! பின்னர் அது நேரில் காணும்
நிகழ்ச்சிதான்! முடிவினை முன் நிகழ்த்தலாமோ?

'தாமரைத்தீவான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனைச் சென்று பார்க்க வழக்கறிஞருக்கும் அனுமதி மறுப்பு!

வெலிக்கடைச் சிறைச் சாலையில் கடந்த மூன்று மாதங்களாக அவசரகாலச் சட்டவிதியின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனை சென்று பார்க்க வழக்கறிஞருக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கவிஞர் காசி ஆனந்தனை சென்றுபார்ப்பதற்கு அவரது தாய் தந்தை, சகோதரர்கள் மட்டுமே இப்போது அனுமதிக்கப்படுகின்றனர். நண்பர்களோ வேறு உறவினர்களோ அனுமதிக்கப் படுவதில்லை.

இந்நிலையில் வழக்கறிஞர் என்ற முறையில் கவிஞரை சிறையில் சென்று சந்திப்பதற்கு தமக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று கோரி வழக்கறிஞர் திரு. சி. வி. விவேகானந்தன் பாதுகாப்பு வெளிநாட்டமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு 28.7.72லும், 18.8.72லும் இரு கடிதங்களை எழுதியிருந்தார்.

இக்கடிதங்களுக்கு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடமிருந்து திரு. விவேகானந்தனுக்கு 4.9.72ல் பதில் கடிதம் வந்துள்ளது. அந்தக் கடிதத்தில் தடுப்புக்காவலிலுள்ள திரு. சிவானந்தனை சென்று பார்ப்பதற்கு அனுமதி வழங்கமுடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

''எனது கட்சிக்காரரான மட்டக்களப்பு அமிர்தகளி 'பார்' வீதி 137ம் இலக்க வீட்டில் வதியும் திரு. கே. காத்தமுத்துவின் அறிவுறுத்துரையின்படி இத்திருமுகத்தை தங்களுக்கு எழுதுகிறேன்.

''மேற்கூறிய எனது கட்சிக்காரரின் மகன் திரு. கா. சிவானந்தன் அவர்களை தாங்கள் அவசரகால ஒழுங்கு விதிகளின்கீழ் வெலிக்கடைச் சிறைச்சாலையில் யூன் 10ம் திகதியிலிருந்து தடுப்புக்காவலில் வைத்திருக்கின்றீர்கள். இன்றைவரை மேற்கூறிய திரு. சிவானந்தன்மீது வழக்குத் தாக்கல் செய்யவில்லையென்றும் அவரை விடுதலையாக்கும் நோக்கோ அன்றி அவர்மீது வழக்கு தொடரும் எண்ணமோ தங்களிடம் இருப்பதாகத் தெரியவில்லையென்றும் எனது கட்சிக்காரர் விளம்புகின்றார்.

வழக்கறிஞர் என்ற ரீதியில் மேற்கூறிய சிறைச்சாலைதனில் மேற்கூறிய திரு. சிவானந்தன் அவர்களை காண்பதற்கு அனுமதி வழங்குவதற்கு சிறை அதிகாரிகள் மறுக்கின்றனர். தங்களுடைய அனுமதி வேண்டும் என்று கூறுகின்றனர். ஆகவே திரு. சிவானந்தன் அவர்களை வழக்கறிஞர் என்ற கோதாவில் காண்பதற்கு எனக்கு அனுமதி வழங்கும்படியும். அப்படி அனுமதி அளிக்கும் பட்சத்தில் அதனை சிறைஅதிகாரிகளுக்கு அறிவிக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்—''

—இவ்வாறு வழக்கறிஞர் விவேகானந்தன் 28.7.72ல் எழுதியிருந்தார். தமிழில் எழுதிய இக்கடிதத்துக்கு பதில் வராததால் 18.8.72ல் ஆங்கிலத்தில் இதே கோரிக்கையை முன்வைத்து மீண்டும் எழுதினார். ஆங்கிலக்கடிதத்துக்கே மேற்கூறிய பதில் வந்திருக்கிறது...

## 'தமிழ் பகுதி சிங்களமயம் ஆகிறது'

### சிங்களவரே ஒப்புக்கொள்கிறார்!

'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பகுதி படிப்படியாகச் சிங்களமயமாகிக் கொண்டிருக்கிறது. இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் சிங்களம் போதிக்கப்படுகிறது. சிங்கள மொழிச் சேவையில் தமிழ்மொழி போதிக்கப்படுவதில்லை. ஆனால் அதில் இந்தியும் ஆங்கிலம் போதிக்கப்படுகின்றன. இதையிட்டு சிங்களவனான நான் கவலைப் படுகின்றேன்.

'இந்தியையும் ஆங்கிலத்தையும் போதிப்பதை விடுத்து சிங்களப் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியை போதிப்பதனால் ஒற்றுமையும் ஐக்கியமும் வளரும்.

'ஐக்கிய முன்னணி என்ற பெயரால் அரசு கட்டில் ஏறியவர்கள் நாட்டில் ஐக்கியத்தைத்தான் வளர்க்க வேண்டும். சிங்கள மக்களிடையே காணப்படும் வகுப்புவாதத்தை ஒழிக்க ஓர் இயக்கமே ஆரம்பிக்கப்பட வேண்டும்.'

—இவ்வாறு பம்பலபிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழக கட்டுப்பெத்தை பிரிவின் தமிழ் சங்க விழாவில் பேசிய திரு. குணசேன விதான என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரங்கல்

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் அமைப்புச் செயலாளர் மாவை சோ. சேனாதிராசா அவர்களின் தந்தையார் திரு. சோமசுந்தரம் 27-8-72 சனிக்கிழமை காலமானார் என்பதறிந்து வருந்துகிறோம்.

தந்தையைப் பிரிந்து வாடும் திரு. சேனாதிராசாவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆர்.

## உள்ளூராட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

இச்சுற்றறிக்கையை தமிழ் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் நிராகரிக்கும் என்று தெரிகிறது.

## தமிழ் மாணவ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தலையாட்டிகளெல்லாம் தார்பாரில் இடம் பெற்றிருப்பதை பார்க்கிறோம். எங்கோ கிடந்தது கள் சாமரம் வீசிபங்காளிகளாகி விடுவதைக் காண்கிறோம். 'எதிர்த்துப் பார்த்தோம்: பலன் இல்லை. இனி எடுபிடியாகிப்பார்ப்போம். பலன் கேட்போம்' என்ற முறையில் ஓங்காரக் கூச்சலிட்டு ஒரு காலத்தில் உலவிவந்தது களெல்லாம் இன்று புகழ் 'ரீங்காரம்' செய்து வட்டமிட்டுக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

இத்தருணத்தில் மாணவ சமுதாயம் மிக விழிப்பாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மாணவனும், இலங்கை பல்கலைக்கழக இறுதி வருடப் பொறியியல் மாணவன்—தோழன் இந்திரனைப்போல் இருக்கவேண்டும். அவரது 'சுதந்திரன்' 30—7—72ல் எழுதிய கட்டுரை மாணவ சமுதாயத்தைத் விழிப்படையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அவர்தம் கட்டுரையை எல்லோரும் படித்து குறிப்பாக மாணவர் திருந்த வேண்டும்.

ஈற்றில் தமிழர் கூட்டணி அமைப்பாளர்களுக்கும் ஒன்று சொல்லவிரும்புகின்றேன். எம்மோடே சேர்ந்து எமது இரகசிய திட்டங்களை அறிந்து, எமது கூட்டணியை உள்ளுக்குள் இருந்தே உடைப்பதற்கு, எம்மோடு சேர்ந்து ஒத்துழைக்கலாம். 'அருள்' அம்பளம் போன்றவர்களை அம்மையாரே ஏவிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே இப்படியான புல்லுருவித் தலைவர்கள் மிக மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்களை அடக்கத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே, தமிழ் கூறும் நல்லுலகமே! ஒற்றுமையே உயர்ந்த ஆயுதம். இந்த ஒற்றுமையுணர்வு இருக்கிறவரை எந்தப் பகையும் நம்மை ஏதும் செய்ய முடியாது. 'ஒன்று பட்டிருப்போம்! ஊறு செய்யவரும் பகையை வேருடன் அழிப்போம்!! கேட்டினை இழைக்கக் கணுக் காணும் பகை நாகங்களை கூட்டோடு அழிக்க சூளுரைப்போமாக!!!'

## இரத்துமலானை இந்துக் கல்லூரி சிங்களமயமாகும்

கொழும்பு இந்து கனிஷ்ட பாடசாலையில் 9ம் 10ம் வகுப்புக்களை ஆரம்பிப்பது பற்றி ஆராய்வதற்கு மேற்படி பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்கக்கூட்டம் 10-9-72 ஞாயிற்றுக்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் கூடுகிறது.

இப்பாடசாலையில் 9ம் 10ம் வகுப்புக்களை ஆரம்பித்துவிட்டு, இரத்துமலானை இந்துக் கல்லூரியை முழுக்க முழுக்க சிங்கள மயமாக்கும் சூழ்ச்சித் திட்டமும் இதில் பின்னப்பட்டிருப்பதாக சில பெற்றோர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## ஈழத் தமிழர்களின் துன்பம் கண்டு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட தலையங்கம் முழுவதும் வருமாறு:-

உலகெங்கும் பரந்து வாழ்கிற தமிழர்களையெல்லாம் ஒருமுறை மனக் கண்ணில் நிறுத்திப் பார்க்கிறோம். அதிலே ஈழத்திலே வாழ்கின்ற தமிழர்களின் முகத்திலே, சோகம் கப்பி இருப்பதையும் கண்களிலே நீர்சுரந்து நிற்பதையும் காண்கிறோம்.

தங்களது சொந்த நாட்டிலேயே சோகம் நிறைந்த வாழ்க்கை வாழவேண்டிய அவலம் இன்று அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. மொழி உரிமை இழந்து, உயர் தமிழ்ப் பண்பாடு அலட்சியப்படுத்தப்பட்டு, இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கப்படுகிற சூழ்நிலையில் சிக்கித்தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

சிங்களத்திலே சிங்காசனம் அமைத்து அரசோச்சிய தமிழ்-இன்று அதிகார வெறிபிடித்த சின்னஞ்சிறிய கூட்டத்தால் அலட்சியப்படுத்தப்பட்டுவருகிறது. கோலத்தமிழ் பண்பாட்டின் கொள்கை வழி நின்று ஞாலம் சிறக்க வாழ்ந்த ஈழத்துத் தமிழர்கள் —இன்று ஆடிக் காற்றில் அடிபட்டு கோபுரத்தின் மேலே ஏறிவிட்ட சிற்றிலைத் துண்டு போல சந்தர்ப்பவசத்தால் அதிகாரத்தில் அமர்ந்துவிட்ட சிங்கள அரசவையில் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டுவருகின்றனர்.

சிங்கள அரசு ஒரு சிறிய பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஒடுக்கிவிட நினைப்பது— அதற்காக ஆட்சிமுறைகளை அவிழ்த்துவிடுவது வரலாற்று புகழ்மிக்க தமிழினத்தை ஒடுக்கிவிட நினைப்பது—அவர்களது அறியாமையையே கோடிட்டுக் காட்டுகிறது!

பங்களாதேஷ் மக்களின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டு, அந்த நாட்டு மக்கள் அழுத்தி நொறுக்கப்பட்டு கொன்று குவிக்கப்பட்டு, கொலைவெறிக் கும்பலின் கொடூர பசிக்கு இரையாகிக் கொண்டிருந்த அந்த மக்கள்—இன்று உலக அரங்கிலேசுதந்திரகீதம்படைத்துக் கொண்டிருக்கின்றனர்! அடக்குமுறையால் ஒரு இனத்தை அழித்துவிடலாம் என்று கோரத்தாண்டவம்ஆடிய யாகியாகானின் இராணுவ ஆட்சி இன்று இருந்த இடம் தெரியவில்லை அதைப் புதைத்த இடத்தில் புல்முளைத்துப் போய்விட்டது. இந்தப் பேருண்மையை திருமதி பண்டாரநாயகா அரசு உணர்ந்துகொள்ள வேண்டும்.

இலங்கை இந்தியாவின் காலடியிலே இருக்கிற சின்னஞ்சிறிய நாடு! குறிப்பாக கைக்கெட்டுகிற தூரத்திலே இருக்கிற சிறியநாடு உலக அரங்கிலேவாய்ஜாலம், மாய்மாலம் காட்டிக்கொண்டிருக்கிற சீனர்களின் கானல் நீர் உறவை பெரிதாக நம்பிக்கொண்டு இந்தியாவின் இரத்தபாசமிக்க தமிழர்களை ஒடுக்குவதன் மூலம் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்க முயன்றால் அது இலங்கை அரசாங்கத்திற்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்!

இலங்கை அரசாங்கத்தின் இந்த தமிழ் விரோதப் போக்கினை முறியடிக்க ஈழத்து தமிழர்கள் எல்லோரும் ஒன்று திரண்டிருக்கிறார்கள்! அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டையென சிதறி ஆளுக்கொருவிதமாக பேசிக்கொண்டிருந்தவர்கள் இன்று ஒன்று திரண்டு 'தமிழர் கூட்டணி' அமைத்திருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன! தங்களது உரிமைகள் மதிக்கப்படாவிட்டால் பிரிவினை வளரலாம் என்ற எண்ணம் பரவி வருகிறது.

இந்த நிலையில் ஆத்திரம் கொண்ட இலங்கை அரசு அவர்களது நடவடிக்கைகளை யாகியாகான் பாணியில் தொடரலாம் என்ற அச்சமும் அரும்பி நிற்கிறது!

ஈழத்துத் தமிழர்கள் தாய் மொழியின் உயர்வுக்காகவும் தங்களின் கலாச்சார பண்பாட்டு நாகரீக விடுதலைக்கும் போராட்டத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

உலகமெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்கள் மிக உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஈழத்துத் தமிழர்களுக்கு ஏற்பட்டு இருக்கிற துன்பமெல்லாம் தங்களுக்கு நேர்ந்த துன்பமாக எண்ணி அவர்கள் கண்கள் எல்லாம் கனலாகிக்கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் நாலரைக் கோடி தமிழ் மக்களின் இரத்தம் சூடேறிக் கொண்டிருக்கிறது. சதை ஆடிக் கொண்டிருக்கிறது.

உலகத்து தமிழர்களின் எண்ணங்களை பிரதிபலிக்கிற விதமாக இலங்கையில் நடந்து வருகிற ஜனநாயகக் கொலையைத் தடுத்து நிறுத்துமாறு, திராவிட முன்னேற்றக்கழகம் மதுரை மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின்மூலம் இந்தியப் பேரரசை கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஆகவே இலங்கை அரசாங்கம் ஈழத்துத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, அவர்கள் உரிமையுடன் உயர்ந்து வாழ வழிவிடவேண்டும்! அப்படியல்லாமல் அதிகாரவெறியில், பெரும்பான்மை பலத்தை வைத்து எதையும் செய்துவிடலாம் என்ற மமதையில் தமிழர் உரிமைகளை மீண்டும் அலட்சியப்படுத்துவார்களேயானால் பிறகு சிங்கள அர[illegible] தாக இருக்காது என்பதே நமது கருத்தாகும்.

திருக்குறள்

மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றன. கடவுள் வாழ்த்துப் பகுதியில் உள்ள 10 குறள்களையும் ஒழுங்கு முறைப்படி சேர்த்துக் கொடுத்து, உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகம் ஒன்றை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியை உடைக்கப் 'போகிருராம்!

## 'பிறீவ்லெஸ்' பாரிஸ்டரின் பிதற்றல்!

இப்போ புதுக் கோமாளிக் கூட்டமொன்று ஈழத்தமிழக அரசியலில் புக முயற்சிக்கின்றது. இந்தக் கூட்டத்தின் அமைப்பாளர் வெள்ளவத்தையிலுள்ள ஒரு பெருஞ் சீமான். இதில் 'பபூன்' வேடமேற்று நடிப்பவரே 'பிறிவ்லெஸ்' பாரிஸ்டர் சிவானந்தன்.

இந்த 'பபூன்' சென்ற ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் (89, பாணஸ் பிளேஸ்) ஓர் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அவர் தமிழினத்தின் தரகர் ஒருவர் மூலம் சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. தில்லைநாதன் என்பவருக்கு வேலை எடுத்துத்தருவதாயும் தனது கூட்டத்திற்கு 25 ஆட்களைக் கூட்டிக்கொண்டு வரவேண்டுமெனவும் கூறியிருந்தாராம்.

கூட்டம் ஆரம்பமானதும் திரு. சிவானந்தனால் கொள்கை விளக்கம் தரப்பட்டது. தமிழர்கூட்டணியைஉடைப்பதே தமது கொள்கையெனவும் தமிழ் மக்களை இருளில் இருந்து மீட்பதே தமது குறிக்கோள் எனவும் கூறினார்.

அடுத்து தமது இயக்கத்திற்கு பெயரிடவேண்டும் என்ற சர்ச்சை எழுந்தது. அப்போது ஒருவர் தமிழர் முற்போக்கு விடுதலை இயக்கம் என பெயரிடலாமென்றார். உடனே சிவானந்தனின் தம்பியான, தராதப்பத்திர மற்ற ஆசிரிய சேவையில் அண்மையில் சேர்ந்த ஆசிரியர் (அதனால்தான் இத்திருக்கூட்டத்தில் உள்ளவர்) ''நாமென்ன விடுதலை யில்லாமல் அடிமைகளாக சிறையிலா இருக்கிறோம். சுதந்திரமாக அம்மையாரின் பின்னால்தானே திரிகிறோம்' என்று ஒரு போடுபோட்டார்.

அதன் பின்பு அதற்கு ஐக்கிய முன்னணி வாலிப இயக்கம் எனப் பெயரிடப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் ''தினசதி'' செயலகத்திற்கு போன் செய்ய படப்பிடிப்பாளர் சிறிது நேரத்தில் ஓர் வானில் வந்து படம் எடுத்துச் சென்றார். யார் யாருக்கு எப்படி உதவுகிறார்கள் என்பது தெரிகிறதல்லவா?

ஆட்களைக் கூட்டிச்சென்ற தில்லைநாதன், ஒருவரும் ஒரு கேள்வியும் கேட்கக்கூடாதெனவும், தான் சொல்லுவதற்கு ''ஆமாம்'' போடவேண்டுமெனவும் சொல்லியே கூட்டிச் சென்றார். அவர் எம்மில் ஒருவரை சிவானந்தனிடம் காட்டி இவர் முதல் நாளே யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததாகவும் அங்கு கூட்டணிக் கூட்டத்திற்கு ஆட்கள் போவதில்லையென்றும் போகிறவர்கள்கூட வேடிக்கை பார்க்கவே போவதாயும்கூறினார். அவரால் காட்டப்பட்டவர் ஆறு மாதமாக யாழ்ப்பாணம் போகாதவர்.

அப்படியா மிக்க சந்தோசம் என்று ஓர் வீரப் புன்னகை புரிந்தார் தமிழினத்தை இருளிலிருந்து வெளிக்கொண்டுவர விசுவரூபமெடுத்திருக்கும் சிவானந்தன்.

அடுத்து சிவானந்தன் அரசியல்திட்டத்தை எடுத்து ''பிறீவ்லெஸ்'' பாரிஸ்டர் முறையில் தனக்கு விளங்கியபடி விளங்கப்படுத்தினார். தமிழர் கூட்டணியில் உள்ளவர்களுக்கு அரசியல் திட்டம் விளங்கவில்லையாம். தமிழரசுக்கட்சி செல்வாக்கு இல்லாதபடியால் கூட்டணி என்ற பெயரில் இயங்கி செல்வாக்கை மீண்டும் காப்பாற்ற முயல்கிறதாம். தான் தமிழ் பிரதேசம் எங்கும் சுற்றுப்பயணம் செய்து மக்களுக்கு விளங்கப்படுத்தப் போகிறாராம். தமிழ் மக்கள் யார் சொல்வது சரி என்பதை தீர்த்துக்கொள்ளட்டும்.

தில்லைநாதன் போன்ற பச்சோந்திகள் அல்ல தமிழ் மக்கள் என்பதை சிவானந்தன் விரைவில் உணர்வார். அடுத்து ஒவ்வொரு வாலிபரையும் தம்பி எங்கே வேலை செய்கிறீர் சும்மா இராதையும். ஏதாவது வேலைக்கு ''அப்பிளிகேசன்'' போடும். என்னை வந்து சந்தியும்! என்று வ. பொ. பாணியில் ஸ்ரண்டுகளும் விட்டார் சிவானந்தன்.

செயற்குழு தெரிவு நடைபெற்றது. இதில்கலந்துகொண்ட பலர் தமிழர் கூட்டணியை சேர்ந்தவர்கள் அவர்கள் கூட செயற் குழுவில் தெரிவு செய்யப்பட்டனர். இச் செயற்குழு நடைமுறைக்குப் போகும்போது இதை பாரிஸ்டர் பெருமான் உணருவார்.

இத்திருக் கூட்டத்தின் உபதலைவர் வேலைக்காக வாலைப் போட்டுக்கொண்டு திரியும் திருவாளர் தில்லைநாதன். அமைக்கப்பட்ட 17 அங்கத்தவர்களைக் கொண்ட செயற்குழுவில் 9 பேர் தமிழர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள். இவரது முக்கிய நோக்கம் தமிழர் கூட்டணியை உடைப்பதாம். உடைத்துப்பார் சிவானந்தா! சிந்திக்கத் தெரியாத சிவானந்தா உன்னால் முடிந்தால் உடைத்துப் பார்!

—"செந்தீ"



## மக்கள் கட்சி தி. மு. க!

'தி. மு. கழகம் ஏதோ சில தலைவர்களின் கையில் இருக்கும் கட்சியல்ல; தலைவர்களின் கையிலிருந்து மாறி — அந்தக் கட்சி தமிழகத்து மக்களின் கைகளுக்கு வந்திருக்கிறது. ஆகவே இந்தக் கட்சியின் வாழ்வு மக்களின் கரங்களில் பத்திரமாக இருக்கிறது. இதைப் பிறரால் அழிக்க முடியாது.

'இந்தக் கழகத்தை அழிக்க நானோ நாவலரோ, அன்பழகனோ, மதியழகனோ, எம். ஜி. ஆரோ, எஸ். எஸ். ஆரோ, அல்லது யார் முயன்றாலும் எங்களைத் தடுக்க கோடிக்கணக்கான தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

'ஆகவே தி. மு. கழகம் தனிப்பட்டயாருடைய கையிலும் இல்லை. கோடிக்கணக்கான தமிழ் மக்களின் பாதுகாப்பில் இருக்கிறது.'

—இவ்வாறு கலைஞர் மு. கருணாநிதி சிதம்பரத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

## தமிழ் சாதியின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தன் சற்குரு கண்ணனிடமும் வினவிப்பார்க்கிறார் கவிஞர்.

சாத்திரங்கள் புகுந்து நாட்டில் சாதிகளைத் தோற்றுவித்ததென்பதை,

''சாத்திரம் கண்டாய்
சாதியின் உயிர்த்தலம்
சாத்திரம் இன்றேல்
சாதி இல்லை''

எனக்கூறி
அச்சாத்திரங்களைப் புகவொட்டாதுதடுத்தல் மக்கள் கடன் என்பதையும் வலியுறுத்துகிறார்.

''பொய்மைச் சாத்திரம்
புகுந்திடின் மக்கள்
பொய்மையாகிப் புழு
வென மடிவர்''

பொய்மைச் சாத்திரங்களால் மக்கள் புழுவுக்குச் சமமாகத் தம்மறிவிழந்து மடிவர் என்று கூறும் கவிஞர் வாக்கு சிந்திப்பதற்குரியது.

அவரது உள்ளத்திற்றான் 'சாதி' எத்தகைய தாக்கத்தை உண்டு பண்ணி விட்டது பாருங்கள்!

### நாட்டுக் கவியாக: —

இப்படிப் பல கோணத்திலும் தோற்றமளித்த கவிஞர் தன் நாட்டையும்; மொழியையும் பாடாமல் விட்டிருப்பாரா? என்ன!

'யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும்
காணோம்'

என்னும் வரிகளிலேயே அவர் தம் தமிழ்ப்பற்று தெற்றென விளங்கி விடுகிறது.

செந்தமிழ் நாடென்னும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே'

என அவர் அடியெடுக்கும் போது.

'விண்ணையிடிக்கும்
தலையிமயம் — எனும்
வெற்பையிடிக்கும்
திறனுடையார்'

என தமிழர் தம் வீரத்தை இமயத்திலும் பெரிதாக மதிப்பிடும்போதும்; அவரது ஏனைய பாடல்களில் ஏற்படாத ஒருவித எழுச்சி உருவாகிறதன்றோ.

'சிலப்பதிகாரச் செய்யுளையும்; திருக்குறளின் உறுதியும்; தெளிவும் கண்டும்; பொருளின் ஆழமும் அழகும் கருதியும்; கம்பனின் கலித்திறன் போற்றியும்; முன்பு தமிழ்ச்சாதியை அமரத்தின்மையுடையது என்று எண்ணியிருந்தேன். எனக் கூறிய கவிஞர் தொடர்ந்து வேதனையோடு;

'ஆப்பிரிக்கத்துக்
காப்பிரிநாட்டிலும்
தென்முனையடுத்த தீவுகள்
பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்
புறத்துள்ள
பற்பல தீவினும் பரவியிவ்
வெளியு
தமிழ்ச்சாதி
தடியடி யுண்டும்
காலுதையுண்டும்;
கயிற்றடியுண்டும்'

வருந்திமாளும் செய்தி கேட்டு வெகுண்டெழுகின்றார். விதியை நொந்து சொல்கிறார். இத்தனைக்கும் நம் வாழ்வு மலரவேண்டில்,

'நமது மூதாதையர்
நயமுறக் காட்டிய;
ஒழுக்கமும் நடையும்
கிரியையும் கொள்கையும்
ஆங்கவர் காட்டிய
அவ்வப்படியே
தழுவிடின் வாழ்வு
தமிழர்க் குண்டு'

என்று உய்ந்திட வழியையும் காட்டுகிறார்.

அவர் வழி நின்றிடில் நந் தமிழ் மக்கள் வென்றிடல் உறுதி!

..வெல்க தமிழ்!

# திருகோணமலை தமிழர் மூதுமலை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பிடுகையில் ஓர் வீழ்ச்சி காணப்பட்டது. காரணம் புகையிலைப் பயிரிடுகையில் ஏற்பட்ட வீழ்ச்சியேயாகும். மேலும் 1905இல் கடற்படைத்தளம் மூடப்பட்டதினால் 1901—1911 காலப்பகுதியிலும் ஓர் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் புகையிரதப் பாதை திருமலைக்கு தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கட்தொகை மேலும் கூடியது.

இந்நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் முடிவுவரை தமிழர்களே திருகோணமலையில் மிகக்கூடிய எண்ணிக்கையுடையவர்களாக இருந்தார்கள்.

## 1946-ல்

சேர் ஆர்தர் றணசிங்கா தனது 1946 குடி மக்கட்தொகை அறிக்கையில் 1921 புள்ளி விபரங்களோடு 1946 புள்ளி விபரங்களை ஒப்பிட்டு இலங்கைத் தமிழர் இம்மாவட்டத்தில் இன்னும் எண்ணிக்கையில் அதிகமாக விளங்கினாலும் அவர்களின் எண்ணிக்கை பெருக்கு வீழ்ந்து விட்டதென்றும். 1921 இல் 5[illegible].2 சதவீதமாகயிருந்த தமிழர் 40.1 சதவீதத்திற்கு 1946இல் வீழ்ந்துவிட்டனர் என்றும் கூறியுள்ளார். அத்தோடு அவர் 1921 இல் [illegible] சதவீதமாக விளங்கிய கரைநாட்டுச் சிங்கள மக்கள் 14.7 சதவீதமாகவும் கண்டிய சிங்கள மக்கள் 2.1 சத வீதத்திலிருந்து 6 சத வீதத்திற்கு அதிகரித்துள்ளனர் என்றும் எடுத்துக்காட்டிய அவர் திருமலைப் பட்டணத்தைப் பொறுத்தவரை சிங்களவர்களே இரண்டாம் இடத்தை வகிக்கின்றனர் என்றும் திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை முஸ்லீம்களே இரண்டாம் இடத்தைப் பெறுகின்றனர் என்றும் கூறியுள்ளார்.

## 1953-ல்

1953இல் திரு. எச். இ. பீரிஸ் நடாத்திய மக்கட்தொகை மதிப்பீட்டிலும் தமிழ் மக்களே தனிப்பட்ட பெரும் பிரிவினராகக் காணப்பட்டனர் எனினும் மொத்த மக்கட் தொகையுடன் ஒப்பிடும்போது அவர்கள் பெருக்கத்தைக் காட்டவில்லை என்பதும் தெரியவருகிறது. அதேவேளையில் கரையோரச் சிங்களவர்களினதும் கண்டியச் சிங்களவரினதும் முசிலிம்கள், பரங்கியர், யுரேசியர் ஆகியோரினதும் எண்ணிக்கையில் ஏற்றம் காணப்பட்டிருந்தது.

## 1963-ல்

திருமலையில் தமிழரின் எண்ணிக்கைக்கும் சிங்களவர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள இடைவெளி சிங்களக் குடியேற்றத்தினால் சுருங்கிவிட்டது. 1963ஆம் ஆண்டின் குடி மக்கட் தொகையின்படி மொத்த இலங்கைத் தமிழரின் தொகையின்படி மொத்த இலங்கைத் தமிழரின் தொகை 51,060 ஆகும். கீழ்நாட்டுச் சிங்களவர் கண்டிய சிங்களவர் ஆகியோரின் தொகை 39,950 ஆகும். எனினும் இலங்கை முசிலிம்களின் தொகை இரண்டாம் இடத்தை வகிக்கும் முறையில் 41,950 ஆக விளங்கியது.

## 1803ம் ஆண்டு தேசப்படம் தெரிவிக்கும் பேருண்மை

இவ்விதம் தமிழர் மரபு வழித் தாயகம் வடக்கையும் கிழக்கையும் வடமேற்கையும் சிலாபத்துறை வரை இணைத்து பரந்து கிடந்ததென்பதற்கு வரலாறுச் சான்றுகள் ஏராளம் ஏராளம். 1.1.1803இல் அரோசிமித் அவர்களினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட இலங்கைத் தேசியப்படத்தினைப் பார்ப்போர் இவ்வுண்மையை உணர்வர்.

## வடமேற்கை இழந்துவிட்டோம்

ஈழத்தமிழ் நிலத்தின் இழக்கக்கூடாத எத்தனையோ பகுதிகளை இன்று இழந்துவிட்டோம். யாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஈழத்தின் வடமேற்கையாம் இழந்துவிட்டோம். ஈழத் தமிழகத்தின் கிழக்குப் பகுதியை—குறிப்பாக எம் உயிரனையதிருமலையை ஆட்சிபீடம் ஏறும் அரசாங்கங்கள் அனைத்தும் ஏப்பமிட வஞ்சனை தோய்ந்த சூழ்ச்சிகளை உருவாக்கியபடியிருக்கின்றன. என்பதை அறிவுடைய எந்தத் தமிழனும் மறக்க முடியாது-மறுக்கமுடியாது.

## திருமலை தமிழனின் உயிர்மூச்சு

தமிழன் தமிழனுக ஈழத் தமிழகத்தில் வாழவேண்டின் உலகவர்முன் யாமும் மானிடர்தான் என்று மதிக்கப்படவேண்டின் திருமலையை வைத்திருப்பவன் — ஈழத்தை வைத்திருப்பவன்'' என்ற பேருண்மை பொதிந்த கூற்றில் எமக்கு நம்பிக்கையிருப்பின் தமிழ் மண்ணை - எம் உயிர் மூச்சாம் திருமலையை உயிர் கொடுத்தும் காக்க உறுதி பூணுவோமாக. ''முயற்சி திருவினையாக்கும்'' தெய்வத்தால் ஆகாதெனினும் தன் மெய் வருந்தக் கூலி தரும்.'' ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி உழைப்பவர்'' என்ற உயர் [illegible] வழிகாட்டிடுக. வெற்றி நம்மதே.

## இந்து இளைஞர் கொடி நாள்

அகில இலங்கை இந்து இளைஞர் சங்கப் பேரவையின் இந்து இளைஞர் கொடி நாள் 16—9—72 அன்று கொண்டாடப்படும்.

மூளாய், அராலி, சங்கானை, சொக்குவில், திருநெல்வேலி, கரணவாய், கைதடி, தனங்களப்பு, மன்னார், வவுனியா, கொக்கிளாய், திருகோணமலை, மூதூர், கட்டைபறிச்சான், சேனையூர், மட்டக்களப்பு, தம்பலகாமம், அம்பாறை, முனைத்தீவு, கோமாரி, நீர்கொழும்பு, சிலாபம், கலகா, கண்டி தெல்தோட்டை, அப்புத்தளை, கொழும்பு. ஆகிய இடங்களில் உள்ள இந்து இளைஞர் மன்றங்கள் இக் கொடி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(24)



## ம.பொ.சியின் எண்ணம் நிறைவேறியிருந்தால்....?

# அண்ணவின் தமிழ்நாடு கண்டேன்

ஈழத்தமிழனுக்கு இன்னல் என்றறிந்திடும் போதெல்லாம் தமிழ் நாட்டிலுள்ள அந்த இதயம் குமுறும்; பொங்கியெழுந்திடும்; போர்ப்பரணிபாடும்!

வாடிடும் ஈழத் தமிழ்க் குலத்தை வாழ வைத்திட வகையும் வழியும் தெரியவில்லையே என்று வேதனையில் அந்த இதயம் வாடும்; இரத்தக் கண்ணீர் வடிக்கும்!

ஈழத்தில்மட்டுமல்ல—உலகின் எந்த மூலை முடுக்கிலும் தமிழ்ச்சாதி துன்புறுத்தப் படுமானல் அந்தத்தாய் இதயத்தால் — தமிழ் இதயத்தால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாது!

அத்தகைய பெரிய இதயத்தோடு உறவாடுவதற்காக, பேராசிரியர் அன்பழகன் அவர்களது இல்லத்திலிருந்து புறப்பட்ட நாம் — சென்றுகொண்டிருந்தோம்.

அந்த இதயம் எது என்பதை இதுவரை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள்! ம. பொ. சி. என்னும் தமிழ் இதயம்தான் அது! ஈழத் தமிழர்களின் மிக நெருங்கிய நண்பர் அல்லவா சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள்!

ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை மிகவும் தெளிவாகவும், தீர்க்கமாகவும் அறிந்து வைத்திருக்கிற தமிழ் நாட்டின் குறிப்பிடத் தகுந்த சில தலைவர்களில் ம.பொ.சி. முதன்மையானவர்!

ஈழத்தமிழர் பிரச்சினையை வெறும் சிறுபான்மைப் பிரச்சினை என்று தமிழ் நாட்டிலேயே பலர் எண்ணியிருந்த போது—இது சிறுபான்மை, பெரும்பான்மைப் பிரச்சினை அல்ல — இலங்கை சிங்கள நாட்டுக்கும், இலங்கைத் தமிழ் நாட்டுக்குமிடையேயுள்ள பிரச்சினை; இரண்டு தனித்தனித் தேசிய இனங்களுக்கிடையே தோன்றியுள்ள பிரச்சினை; என்று தெளிவாகக் கோடிட்டுக் காட்டியவர் சிலம்புச் செல்வர் அவர்கள்!

ம. பொ. சி. அவர்கள், அரசியல் பிரச்சினைகளை அலசி ஆராயும் பாங்கும், அவற்றைத் தெளிவுற விவரிக்கும் அழகும் அவருக்கேயுரிய தனித்திறமைகள். எந்தச் சிக்கலான அரசியல் பிரச்சினைகளையும் எளிய பாமர மக்களுக்கும் விளங்குகிற வகையில் சாதாரண தமிழில் எடுத்துரைக்கும் ஆற்றல் ம. பொ. சி. அவர்களிடம் நிரம்ப உண்டு.

''வறுமையிற் செம்மை சிவஞானத்தின் வாழ்க்கை சில செல்வங்களைப் பெற்றுள்ளது. அவற்றுள் விழுமிய ஒன்று என் உள்ளத்தைக் கவருவது. அது அவருடைய சொற்செல்வம்.

வறுமையிற் செம்மை
மேடையேறும்—
மெல்லிய உடல்
மலர்ந்த முகம்—
மொய்த்த மீசை
கூர்ந்த நோக்கு
கூட்டத்தின் நெஞ்சைக்
கொள்ளை கொள்ளும்—

''சிவஞானம் வாய் திறப்பார், மூலக்காற்றினின்றும் வீசும் எழுச்சி விரைந்தும் இரைந்தும் வாயைத்திறக்கிறது. உடன் தொடர்ந்து நா எழும். புயல் வீசும்—முகில் ஓடும்; மின்னும், இடிக்கும் — மழை, பொன் மழை—தமிழ் மழைபொழியும்—வெள்ளம் பெருகும்—சிவஞானம் சொல்லில் பீடும், மிடுக்கும், ஏக்கமுந்து மிடையும்; அம்மிடையினின்றும் மின்னற் கொடி சுதுவும் —அது காதுகட்குக்கிளர்ச்சியாகும். மனத்துக்கு உணர்ச்சியாகும். கிளர்ச்சியும் உணர்ச்சியும் நாட்டை விழிக்கச் செய்கின்றன — இவையாவும் சிவஞானத்தின் சொற்செல்வப் பயன்கள்—''

இவ்வாறு தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள் சிலம்புச் செல்வரின் ஆற்றலைப் பற்றிக் குறிப்பிடுவது நூற்றுக்கு நூறு உண்மையென்பது ஈழத் தமிழ் மக்கள் அறிவார்கள் — ஏனெனில் சிலம்புச் செல்வரின் சொல்லாற்றலைக் கேட்டுக் கேட்டு தங்கள் இதயத்தை அவரிடம் பறிகொடுத்திருப்பவர்கள் அவர்கள்!

ம. பொ. சி. அவர்கள், இலங்கையும் இந்தியாவும் வெள்ளை ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கு முன்னர், சிறந்ததொரு அரசியல் திட்டத்தை 'தமிழ்முரசு' எனும் ஏட்டில் வெளியிட்டிருந்தார். அந்தத்திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் — இன்று ஈழத்தமிழ்க்குலம் அடிமைச் சேற்றுள் தள்ளுண்டிருக்காது — அந்தத் திட்டம் என்ன என்பதை சிலம்புச் செல்வரே தம்முடைய 'சுயசரிதை'யில் பின் வருமாறு கூறுகிறார்.

லிம் லீக் கோரிய பாகிஸ்தான். நிலத் தொடர்பற்ற — ஆயிரம் மைல் இடைவெளியைக் கொண்ட — இருவேறு பகுதிகளை இணைத்துப் பாகிஸ்தான் அமைக்கப்படலாமென்றால், ஒரு மனிதன் எளிதில் நீந்திக் கடக்கக்கூடிய அளவேயுள்ள கடல் பரப்பால் பிரிக்கப்படும் யாழ்ப்பாணத்தையும் இந்தியத் தமிழகத்தையும் பிணைத்துப் புதிய தமிழகம் படைப்பதில் தவறில்லையென்றே நான் கருதினேன்.

''ஆனால், பிற்காலத்தில் யாழ்ப்பாணம் பற்றிய கோரிக்கையை நான் அடியோடு கைவிட்டு விட்டேன். ஆம்; பிரிட்டிஷார் வெளியேறிய பின்னர், இந்தியாவுக்கு இலங்கை முற்றிலும் அயல் நாடாகி விட்டதல்லவா!

இவ்வாறு தமது சுயசரிதையில் கூறும் ம. பொ. சி. அவர்கள், தம்முடைய அந்நாள் திட்டத்தை அப்பொழுதே கைவிட்டுவிட்டதாக அறிவித்துவிட்டாலும் கூட,

கிடைத்த ஒரு தோல்வியே தான்!

ஆயினும்கூட, கொள்கை அளவில் ம. பொ. சி. அவர்கள் என்றும் தோற்றதில்லை. இன்றைக்கு அவரது கொள்கைகளை தி. மு. கழக அரசு நடைமுறைப்படுத்தி வருவதைக் காணுகிறோம்! எங்கும் தமிழ், எதிலும், தமிழ் என்ற கொள்கை எங்கு பின்பற்றப்படுகிறதோ— மாநில சுயாட்சி முழக்கம் எங்கு எழுகிறதோ அங்கெல்லாம் சிலம்புச் செல்வர் இருக்கிறார் என்பதே அர்த்தமாகும்!

சொந்த கௌரவம், சுயலாபம் என்பவற்றைவிட, தமிழ், தமிழினம்தமிழ்நாட்டின் நலனையே ஒவ்வொரு தமிழனும் பேணவேண்டும் என்பதை தமது செயல் மூலம் காட்டி வருகிறார் ம. பொ. சி.

தமது கட்சியை வளர்க்க வேண்டும் என்பதை விட, தமது கொள்கைகளை வென்றெடுக்கவேண்டும் என்பதிலேயே ஆர்வம் காட்டிவருபவர் சிலம்புச் செல்வர். தி. மு. கழகத்தின்மூலம் தமிழ் நாட்டில் சுயாட்சியை நிலைநாட்டிவிட முடியும் என்று எதிர்பார்த்து, கழகத்துக்கு பூரண ஆதரவை அளித்து வருகிறார் ம. பொ. சி. அவர்கள்!

இத்தகைய தூய்மைமிக்க தலைவரை சந்திப்பதற்காக

அவரது இல்லத்தை நாம் அடைந்தபோது — வாசலில் காத்து நின்று கைகூப்பி வணங்கி வருக வருக என்று எம்மை வரவேற்றார் ம. பொ. சி. அவர்கள். தந்தை செல்வா அவர்களை வாரி அணைத்து உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்ளே சென்ற நாம் சுமார் ஒரு மணி நேரம் வரை சிலம்புச்செல்வருடன் பல பிரச்சினைகளையிட்டும் அளவளாவினோம். ஈழத்தில் தமிழினத்துக்கு இழைக்கப் பட்டுவரும் அநீதிகளை கேள்வியுற்றபோது — அவரது துவண்ட மீசைகள் துடித்து எழுந்தது கண்டேன்!

ஈழத் தமிழருக்குற்ற கொடுமைகளைந்திட நேரடியாக எந்த உதவியையும் செய்ய முடியாத நிலையில் தமிழ் நாடு இருக்கிறதே என்கின்ற வருத்தம் அவரிடம் கப்பியிருந்தது.

பல ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அவர் வெளியிட்டபோதிலும் அவற்றையெல்லாம் இங்கே கூறுவது எனது நோக்கமுமல்ல—கூறவும் மாட்டேன்.

ஆனல் அவர் தந்த ஒரேயொரு உறுதியை மட்டும் இங்கு குறிப்பிட்டுக் கூறுவேன். தானாடாவிட்டாலும் சதையாடுவது போல— ஈழத்தமிழினம் உரிமைக்குப்போராடும் போது அடக்கு முறை ஏவிவிடப்பட்டு தமிழர்கள் கொன்றொழிக்கப்படுவார்களானல் —அதை தமிழ்நாடு பார்த்துக்கொண்டிராது — அரசியல் சட்டத்துக்குட்பட்டு எடுக்கவேண்டிய — எடுக்ககூடிய சகல நடவடிக்கைகளையும் எடுக்கும். இப்போதிருக்கும் தமிழ் நாடு அரசு, இன, மொழி உணர்ச்சிமிக்க அரசு. அது பார்த்துக்கொண்டு 'சும்மா' இருக்காது என்பது மட்டும் உறுதி''

என்று அவர் கூறியபோது உள்ளத்தில் புதிய உணர்ச்சி பிறந்ததில் வியப்பென்ன? சிலம்புச்செல்வரிடமிருந்து புத்துணர்ச்சியுடன் விடை பெற்றுக்கொண்டோம்—

தொடரும்.

### கோவை-மகேசன்

''இலங்கையின் வடபகுதியும் இந்தியத் தமிழகத்தை அடுத்தாற்போலுள்ளதும் தமிழர் மிகுதியாக வாழ்வதுமான யாழ்ப்பாணத்தின் மீதும் உரிமை கொண்டாடியிருந்தேன்.

''இலங்கையில் தமிழர் மிகுதியாக வாழும் மட்டக்களப்பு போன்ற பகுதிகளைப் பற்றி அப்போது நான் அறிந்திருக்க வில்லையாதலால் யாழ்ப்பாணத்தை மட்டும் கோரியிருந்தேன்.

''அந்நாளில் இந்தியாவிலும் இலங்கையிலும் பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற்று வந்ததால், இந்த இரண்டு நாடுகளிலுள்ள மக்களுக்குக் குடியுரிமை ஒன்றாக இருந்தது — அதாவது, இன்றிருப்பது போன்று இந்தியாவிலிருந்து இலங்கை செல்லவும் இலங்கையிலிருந்து இந்தியா வரவும் சங்கடங்களில்லை. இந்தியாவில் வாழும் எனக்கு இலங்கை அயல்நாடாகத் தோன்றவில்லை. ஆம்; யாழ்ப்பாணத்தை அயல் நாடொன்றின் உட்பகுதியாக நான் கருதவில்லை. அதனல், இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பிரிட்டிஷார் வெளியேறவிருந்த தருணத்திலே, மொழி அடிப்படையில் இந்திய — இலங்கை எல்லைகளைத் திருத்தி அமைக்குமாறு கோருவது தவறென்று நான் கருதவில்லை.

''இந்தியாவையும் இலங்கையையும் கடல் நீர் பிரித்து நிற்பதை நான் அப்போது அறியாமலில்லை. அறிந்தும் நிலத் தொடர்பற்ற யாழ்ப்பாணத்தின் மீது உரிமை கொண்டாடக் காரணமிருந்தது.

''அப்போது, இந்தியாவில் முஸ்லிம்கள் மிகுதியாக வாழும் மாநிலங்கள் கொண்ட பாகிஸ்தானை முஸ்லிம் லீக் கோரி வந்தது. வடமேற்கிலுள்ள பஞ்சாப்-சிந்து — எல்லைப்புற மாநிலங்களும், அதற்கு சுமார் ஆயிரம் மைல் தொலைவிலுள்ள வங்க மாநிலமும் இணைந்ததே முஸ்

எதிர்காலத்தில் இந்திய துணைக் கண்டத்திலும் இலங்கையிலும் ஏற்படக்கூடிய அரசியல் திருப்பங்கள் என்னென்ன மாற்றங்களைக் கொண்டுவருமோ யார் கண்டார்கள்?

இப்படியாக சிலம்புச்செல்வர் அவர்களை சுற்றி சுற்றி என் சிந்தனை சுழன்றுகொண்டிருந்தபோது — 1971 பொதுத்தேர்தல் சமயத்தில் அண்ணன் அமிர்தலிங்கத்துடன் தமிழ்நாடு சென்றிருந்தபோது ம. பொ. சி. அவர்களது இல்லத்தில் அவரைச் சந்தித்த காட்சியும் நினைவுக்கு வந்தது.

அப்போது மதியம் 2 மணி இருக்கும். மயிலாப்பூர் தொகுதி வாக்காளர்களைச் சந்தித்துவிட்டு களைத்துப் போய் இல்லம் திரும்பியிருந்தார் ம. பொ. சி! அமிர் அண்ணனைக்கண்டபோது'' வாருங்கள் தம்பி'' என்று வரவேற்ற சிலம்புச் செல்வர் 1970 பொதுத் தேர்தலில் அமிர்தலிங்கம் அவர்கள் தோல்வியடைந்த செய்தி தமக்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்ததாக உள்ளம் வெதும்பிக் கூறினர். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் ம.பொ. சி. அவர்கள் வெற்றிபெற வேண்டும் என்ற எங்களது ஆசையையும் ஆவலையும் அப்போது தெரிவித்துவிட்டு திரும்பியிருந்தோம்—

இருந்தும், மயிலாப்பூர் சட்டமன்றத்தேர்தல்முடிவு எமக்கு மட்டுமல்ல — தமிழ் இன உணர்ச்சிமிகுந்த யாவருக்கும் பேரிடியைக்கொடுத்ததென்பதில் ஐயமில்லை. ஆம், ம. பொ. சி. அவர்களுக்கு அத்தேர்தலில் கிடைத்த தோல்வி தமிழர் பண்பாட்டுக்கும் தமிழ் மொழி உணர்ச்சிக்கும்

## தமிழ்த் திருமணம்

வண்ணார்பண்ணை தமிழரசு வாலிப முன்னணியைச் சேர்ந்த துடிப்புமிக்க இளைஞர் திரு. கனகரத்தினம், 10-9-72ல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைவடமேற்கு பத்திரகாளியம்மன் கோவில் வீதியில் உள்ள இல்லத்தில் செல்வி. க. சரஸ்வதியை தமிழ் முறைப்படி திருமணம் செய்துகொள்கிறார்.

---

## பெரியார் வாழ்க்கை வரலாறு!

'சகோதரர்களே, சகோதரிகளே, உங்களது சாதி என்று—உங்களது தெய்வம் என்று-மதம் என்று-எனவே சாதியைப் பற்றி சிந்திக்காதீர்கள் — சாதியைப் பற்றி பேசாதீர்கள்' — என்று 100 ஆண்டுகளுக்கு முன்பே சமூக சீர்திருத்தத்தை பரப்பிய பெரியார் ஸ்ரீ நாராயண குரு.

அப்பெரியாரது 118வது பிறந்த நாள் நினைவாக 'உத்தமர் ஸ்ரீ நாராயண குருவும் அவரது போதனைகளும்' எனும் தலைப்பில் திரு. வீ. வீ. பாஸ்கரன் அவர்கள் ஒரு சிறு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்நூலை 256/3, நீர்கொழும்பு வீதி, வத்தளையில் பெற்றுக்கொள்ளலாம்.

## சுதந்திரக்கட்சி...

2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராமமக்கள் ஏமாந்து விடவில்லை. நான் கடந்த காலங்களில் பொது மக்களாகிய உங்களுக்கும் விசேஷமாக கமக்காரருக்கும் ஆற்றிவந்த கடமையையும் சேவையையும் தொடர்ந்தும் ஆற்றும்படி என்னை திரும்பவும் பணி செய்ய வாக்களித்து வாய்ப்பளித்தபடியால் இன்னும் உற்சாகமாகவும், உறுதியுடனும் பாரபட்சமின்றி நேர்மையாக சேவை செய்வேன். என்பதைக் கூறி வைக்க விரும்புகிறேன்'' என்று கூறினார்.

சங்குவேலி கி. மு. சங்க தலைவர் திரு. சி. அரச — இரத்தினம் (கனிஷ்ட அதிபர் மானிப்பாய் இந்துக் கல்லூரி) திரு. அ. கந்தசாமி இளைப்பாறிய தலைமை ஆசிரியர், திரு. லோ. இராசகுமார், திரு. க. அருமைத்துரை, திரு. சி. டொ. அரசேந்திரன், திரு. க. பத்மநாதன், திரு.ச. சிவலிங்கம் திரு. அ. கணேசமூர்த்தி ஆகிய ஒன்பது தமிழர் கூட்டணியைச் சேர்ந்தோர் வெற்றி பெற்றவர்களாவர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

முதன்முதல் இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற, முதன் முதல் இந்தியாவிலிருந்து
ஹாலிவூட் ஆஸ்கார் பரிசுக்கு நியமிக்கப்பெற்ற நடிப்பிற்கே இலக்கணம் வகுத்த
பத்மஸ்ரீ சிவாஜியின் திரைப்படவிழா

# செல்லமகால் திரையில்

இப்பொழுது காட்சியளிக்கிறது

சிவாஜி சரோஜாதேவி

நடித்த

## வளர்பிறை

அடுத்து எதிர்பாருங்கள்

குங்குமம்

மோட்டார் சுந்தரம்பிள்ளை

பேசும் தெய்வம்

அஞ்சல் பெட்டி 520

வெகு விரைவில்

சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
எம். ஆர். ஆர். வாசு
மனோரமா
வி. கே. ராமசாமி

—நடித்த—

## பட்டிக்காடா பட்டணமா?

இப்பொழுது காட்சியளிக்கிறது

# சென்ட்ரல்

திரையில்

சிவாஜி தேவிகா நாகேஷ்
மனோரமா விஜயகுமாரி
எஸ். எஸ். ராஜேந்திரன்

—நடித்த—

## சாந்தி

2 வது வாரம் கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) லிடோ (யாழ்நகர்)



அகில இந்திய சிறந்த நடிகர் விருது பெற்ற

பாரத் எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா—லக்ஷ்மி—அசோகன்—மனோகர்—சோ
மற்றும் பலர் நடித்த—

கே. சி. பிலிம்ஸ்

# ரிக்ஷாக்காரன்

(வண்ணச் சித்திரம்)

இசை: எம். எஸ். விஸ்வநாதன்

இயக்குநர்: ம. நீலகண்டன்

கடைசி வாரம் கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்)

## "அருணோதயம்"

சிவாஜி—சரோஜாதேவி—முத்துராமன் —நடித்த—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஆம் இலக்கத்தில் 1972ம் வருடம் செப்டெம்பர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.